# இராவணன் கோட்டை



கே. எஸ். ஆனந்தன்.

# இராவணன் கோட்டை

### சிறுவர் நவீனம்

கே. எஸ். ஆனந்தன்

மீரா வெளியீடு
யாழ்ப்பாணம் - இலங்கை

| | | |
|---|---|---|
| Title | ☐ | Iravanan - Kottai |
| Subject | ☐ | A. Children's Literature |
| Aurhor | ☐ | K. S. Ananthan |
| Language | ☐ | Thamizh |
| Publication | ☐ | May. 1990 |
| Edition | ☐ | First |
| Price | ☐ | Rs. 20/- |
| Copyright | ☐ | Reserved With The Publishers] |
| Paper Used | ☐ | News Print - Sri Lanka |
| Size | ☐ | 1/8 D/M |
| Type Points | ☐ | 12 pt |
| Page | ☐ | 71 + 4 |
| Cover | ☐ | Lanka / Colombo Studio |
| Publishers | ☐ | David Ligory. Meera Veliyeedu |
| | ☐ | 38, Vembadi Road, Jaffna-<br>Sri Lanka |
| Printer | ☐ | Abrami Printers - Jaffna. |

## அணிந்துரை

சிறுவர் நவீனம் ஈழத்தில் வெளிவருவது மிக மிகக் குறைவு, சிறுவர் பாடல்கள் பெருகிய அளவுக்கு சிறுவர் நவீனங்கள் எழுதப்படவில்லை முப்பத்தைந்து ஆண்டுகளில் வெளிவந்த சிறுவர் நவீனங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்

கடந்த இருபத்தைந்தாண்டுகளுக்கு மேலாக பல நாவல்களைப் பெரியவர்களுக்கு எழுதி எழுதி கைதேர்ந்த நாவலாசிரியர் திரு. கே. எஸ். ஆனந்தன் சிறுவர் நவீனமும் எழுதமுடியும் என்பதை ஈழத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு இச்சிறுவர் நவீனம் மூலம் மெய்ப்பித்துவிட்டார்.

கதையின் மொழிநடை பெரும்பாலும் நல்ல தெளிந்த உரை நடையாக இருக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது கதையை வெற்றிகரமாக அமைத்து விடுவதென்பது எளிதான காரியமல்ல, கதையின் கருத்தும் அமைப்பும் உயிரும் உடலும் போன்ற உறவு கொண்டவை. இவை ஒன்றுக்கொன்று முரணின்றி இணைந்து பிணைந்து உருவாகவில்லை என்றால் அந்தக் கதை கலை உணர்ச்சியை இழந்து விடும்

துப்பாக்கிக் கதை, திருட்டுக் கதை, துப்பறியும் கதை என்பவற்றைப் படிக்கும் போது சிறுவர்களுக்காக பல ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தேசிங்குராசன் கதை, அபிமன்னன் சுந்தரி மாலை கதைகள் நல்ல கதைகளாக, வீரச்சுவை நிறைந்த கதைகளாக விளங்குகின்றன

இச் சிறுவர் நவீனம் சரித்திரக் கதைதான், ஆனால் வீரதீர கதையாக எழுதப்பட்டுள்ளது தெளிந்த மொழிநடையில் எழுத பட்டுள்ளது சிறுவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்கும் சிறுவர் இலக்கியமாக இது இருக்கின்றது. படிக்கும் சிறுவர்களை இந் நவீனம் சுண்டி இழுத்து விடுமென்பதில் எதுவித சந்தேகமும் ஏற்பட வேண்டியதில்லை.

அதிபர் ஆனைக்கோட்டை
அமெரிக்கன் மிஷன் பாடசாலை
ஆனைக்கோட்டை

ந. சிவபாதம்
பிரசாரச் செயலாளர்
இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம்,
யாழ்ப்பாணம்

# பதிப்புரை

## சிறுவர் நவீனம்

அன்பான பெற்றோர்களே;

எந்தமாதிரிக் கதைகள் உங்களுக்குப்பிடிக்கும்என்று சிறுவர், சிறுமியரைக் கேட்டால் நமக்கு கிடைக்கும் பதில், மாஜாஜால மந்திர தந்திர வீரதீரச் செயல்கள் நிறைந்த கதைகள் என்பார்கள்.

சிறுவர்களுக்கு கதை எழுதுவதற்கு தனித் திறமை வேண்டும். இந்த முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறார். கே. எஸ். ஆனந்தன் அவர்கள். இந்நூலை விறுவிறுப்புடன் எழுதியிருக்கிறார்.

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு இந்நூலை வாங்கிக் கொடுத்து எங்களுக்கு நல்லாதரவு தரும்படி வேண்டுகிறோம்.

38, வேம்படி வீதி
யாழ்ப்பாணம்,
15- 05- 1990

அன்புடன்:
டி. விகோரி

# 1

ஜனநாதமங்கலத்து மன்னன் மகீபன் மிக கவலையுடன் காணப்பட்டான். அவனுடைய மனக்கவலைக்கு மருந்து இடையாது என்று மந்திரி மாளவர்மர் தீர்மானித்து விட்டார். ஆனுலும் அரசனே மகிழ்விக்க பல்வேறு முயற்சிகள் செய்து வந்தார். எதுவும் வெற்றி அளிக்கவில்லை. அரசனே தன்னுடைய வேண்டுகோளை நிறைவேற்ற எவரும் முன்வராதது கண்டு கவலையில் மூழ்கினுன்.

''அரசே கவலையை விட்டொழியுங்கள். எங்கள் சேனுதிபதி சேனுதீரனே இராவணன் கோட்டைக்கு போக முடிவு செய்துள்ளார்'' என்று மந்திரி மாளவர்மர் கூறினர். ''மாளவர்மரே சேனுதிபதி மகாவீரன். ஆனல் இராவணன் கோட்டைக்கு வீரனுயிருப்பவன் மட்டும் போய் பலன் கிடைக்காது.''

''வருகின்ற புத்தாண்டு போட்டிகளில் அயல் ஊரவர்களையும் பங்கு பற்றச் செய்து திறமைசாலிகளை தெரிவுசெய்தால் என்ன?''

''சிறந்த யோசனைதான் ஆனல்......?''

''என்ன தயக்கம் வேந்தே?,,

''இராவணன் கோட்டை இருக்குமிடம் போவதற்கு யாரும் முன்வருவார்களா என்பதா சந்தேகம்''

''இம் முறை போட்டியில் எதாவது ஒரு முடிவுக்கு வரலாம். இல்லையெனில் தளபதியின் எண்ணப்படி விட்டு விடுவோம்.''

''மாளவர்மரே''

''அரசே''

''அரசரின் விருப்பத்தை பூர்த்தி செய்வோருக்கு நாட்டின் பாதி அரசுரிமையும், அரசகுமாரி ஜனனியும் வெகுமதியாக கிடைப்பாள் என்று விளம்பரப் படுத்துங்கள். வேற்று நாட்டவராய் இருந்தாலும் இப்பரிசு வழங்கப்படும் என்பதையும் தெரிவியுங்கள்' என்ருர்'

''சித்தம் அரசே'' என்று கூறி விடை பெற்ருர் மந்திரி மாளவர்மர்.

புதுவருடத்தையொட்டி ஜனநாதமங்கலம் விழாக் கோலம் பூண்டிருந்தது. அயல் நாட்டவர்கள் மகீபனின் செய்தி அறிந்து கூட்டம் கூட்டமாக தலை நகரில் குவிந்து கொண்டிருந்தனர்.

இராவணன் கோட்டை பற்றியும் அரசரின் அறிவிப்பு பற்றியும் மக்கள் பல வாருகப் பேசிக் கொண்டனர். அரசருக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று சிலர்

இரகசியமாக கேலி செய்தனர். அப்படி ஒருகோட்டையும் இல்லை எல்லாம் வெறும் கற்பனை என்றும் சிலர் கூறிக் கொண்டனர். ஆனாலும் புத்தாண்டு தினத்தில் நடக்கப் போகும் வீரப் போராட்டங்களை காண மக்கள் கூட்டம் தலை நகரை முற்றுகையிட்டிருந்தது.

அரண்மனைக் கோட்டைக்குள்ளே போட்டி நடை பெறும் அரங்கம் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது ஒருபுறம் அரசரும் அரசபரிவாரங்களும் உட்கார மேடை அமைக்கப்பட்டிருந்தது. மக்கள் வசதியாக போட்டிகளை பார்ப்பதற்காக சுற்றிவர இருக்கைகள் போடப்பட்டி ருந்தன ஒரு பகுதியில் புலிக்கூண்டும் வீரர்கள் அரங்கி னுள் நுழைவதற்கான பாதையும் அமைக்கப்பட் டிருந்தன. அரண்மனை அதிகாரிகள் சகிதம் தளபதி சேனாதிரனே யாவையும் முன்னின்றும் மேற்பார்வை செய்தான்.

''போட்டியின் கதாநாயகனான தளபதி அவர்களே நாளைக்கு போட்டியில் தாங்கள் கலந்து கொள்வதால் இன்று சற்று ஓய்வெடுத்து கொள்வது நல்லது என்பது எனது அபிப்பிராயம்'' என்றான் உதவி தளபதிகளில் ஒருவனான உதயவர்மன்.

''உதயவர்மா! இது ஒரு போட்டியா? சுண்டக் காய்களை உருட்டுவது போல எல்லோரையும் ஒரு விநா டியில் உருட்டி தள்ளி விடுவேன் என்றான் சேனாதீரன்

''தங்கள் வீரம் நான் அறியாததல்ல. அயல் நாட் டவர்கள் பலர் வந்திருப்பதாக அறிகிறேன். ஆகவே தான் ......''

''ஹ ஹ ஹ'' என்று பலமாகச் சிரித்தான் சேனாதீரன். 'சிரிக்கும்படியாக நான் என்ன சொன்னேன்''

''உதயவர்மரே! அரசருக்குதான் பித்தம் தலைக்கேறி பிதற்றுகின்றார் என்றால் நீங்களும் அதற்குத்தான் ம் போடுகிறீர்களே. அரசகுமாரிக்கும் பாதி இராட்சியத் துக்கும் ஆசைப்பட்டு சிலர் வரலாம். அவர்களை என் வாள் யமபுரிக்கு அனுப்பிவிடும். அப்புறம் இராவணன் கோட்டையாவது மண்ணாங்கட்டியாவது'' என்று கூறி மேலும் சிரித்தான் தளபதி. அப்படியானால் இராவணன் கோட்டை என்று ஒன்று இல்லையா? என்று வியப்புடன் கேட்டான் உதயவர்மன்.

''யாரோ ஒரு புத்தபிட்சு ஒரு ஏட்டு சுவடி கொடுத் தாராம் அதில் இராவணன் கோட்டை பற்றிய மர்மங் கள் இருக்காம். அதை தேடிப் போய் உயிரை விட யாரையா முன் வருவான்?''

''யாராவது வந்தால்'' ......''

''என் வாளுக்கு பதில் சொல்ல வேண்டி வரும்''

''முடிவு?''

''நானே இராவணன் கோட்டைக்கு போவேன். அப்படி ஒரு கோட்டை இல்லை என நிரூபிப்பேன். அரசின் மனமாயை கலையும். அரசும்' அரசகுமாரியும் எனக்கே வரும். நீரே தளபதி. நானே இந்நாட்டின் மன்னன் என்றான் தளபதி சேனாதீரன்.

''கேட்க ஆனந்தமாகத்தானிருக்கிறது.''

''உதயவர்மரே''

''சொல்லுங்கள் தளபதியாரே''

''அரசகுமாரிக்கும் அரசுக்கும் ஆசைப்பட்டு வெளி நாட்டவர் யாரும் வரலாம் என்று நீர் சந்தேகப்பட்டது போலவே நானும் நினைத்தேன். அவர்கள் வந்து இரா

வணன் கோட்டைக்குப் போக நான் கூறிய காலத்தைக் கடத்தக் கூடாதே என்று இரகசியமாக ஓர் அறிவித்தல் வீரர்களுக்கு அனுப்பி இருக்கிறேன்!! என்றான்.

''தங்களை வாட் போரிலோ, வேறு போர்களிலோ வெல்லக் கூடியவர்கள் அயல் நாடுகளில் இல்லை என்பது நாங்கள் அறியாததா?

''ஆனாலும் முன் எச்சரிக்கையுடனிருப்பது நல்லதல்லவா''?

''உண்மைதான் பிரபு''

''என்ன மரியாதை கூடுது''

''வருங்கால மன்னருக்கு நான் அளிக்கும் மரியாதை''

''நாளைய போட்டியுடன் அரசருக்கு மனம் மாறி விடும். அப்புறம் பத்து நாட்களில் இராவணன் கோட்டைபற்றிய பைத்தியமும் தீர்ந்து விடும். அப்புறம் நானே மன்னன்'' என்று கூறி விட்டு எழுந்து சென்றான் தளபதி.

சேனாதிரன் திறமையான வீரன் அயல்நாடுகளே அவனுடைய வீரத்திறமை கண்டு ஜனநாதமங்கலத்துடன் நட்புறவுடன் இருந்து வருகின்றன. இளம்வயதிலேயே சேனாதிபதி பதவியைப் பெற்றிருக்கும் அவன் மற்றவர்களை வீரர்களாக மதிப்பதில்லை.வயதிற்கு ஏற்ற ஆணவம் அதே சமயம் வாரிசு இல்லாத ஜனநாதமங்கலத்தின் அரசகுமாரியை தானே மணம்முடித்தால் மன்னனாகலாம் என்று மனப்பால் குடிப்பவன். அதற்கும் அரசர் போட்டி வைத்துவிட்டார், அது அவனுக்கு அறவேபிடிக்கவில்லை. ஆனாலும் இராவணன் கோட்டை மர்மத்தினை

அம்பலமாக்கி தானே சுலபமாக அரசையும் அரசகுமாரியையும் அடைந்து விடலாம் என்று இறுமார்ந்திருந்தான்.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதை சேனதிரன் அறிந்திருக்க நியாயமில்லை. நானே சர்வ வல்லமையுடையவன் என நினைப்பவன் மற்றவர்களை அற்பமாக நினைப்பது தான் அதற்கு காரணம்.

புது வருட தினத்தன்று காலையிலேயே அரண்மனைக் கோட்டைக்குள் உள்ள போட்டி அரங்கில் மக்கள் கூட்டம் வேடிக்கை பார்க்க கூடியிருந்தது அரசர் மகியனுடன் அவர் மகள், மந்திரிகள், அரசபரிவாரங்கள் யாவும் வந்து கூடிவிட்டன. போட்டி நடக்கும் அரங்கின் மையத்தில் பல்வேறு ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்தன. போர்க் கலசங்களுடன் வீரர்கள் காணப்பட்டனர் கணீர் என்ற மணி ஒலித்ததும் எங்கும் ஒரே நிசப்தம் மந்திரி மாளவர்மர் எழுந்து அரசருடைய பிரகடனத்தை படித்தார் அடுத்து போட்டிகள் ஆரம்பமாயின.

வாட்போர் நடைபெற்றது. எல்லோரையும் வென்று வாகை சூடிய வீரர்கள் இருவருடன் சேனதிரன் போட்டியில் இறங்கும் கட்டம் ஒரேகரகோஷம். விநாடிக்கு விநாடி வாட்போர் மயிர்கூச்செறியும் வண்ணம் நடைபெற்றது. போட்டியில் நிலைத்து நிற்க முடியாது ஒருவன் பின்வாங்கி விட்டான் மற்றவனை சில விநாடிகளுக்கிடையில் சேனதிரன் தோற்கடித்து விட்டான். அத்துடன் நிற்கவில்லை. தோற்று விழுந்தவனின் மார்பின் மீது வாளின் நுனியை வைத்துக் கொண்டு ஒரு காலையும் தூக்கி அவன் மார்பில் வைத்தான். சபை

யோர் கரகோஷமிட்டனர். அதே சமயம் அரசர் எழுந்து "வெற்றி வீரனே வருக" என்று சேனாதீரனை அழைத்தார்.

சேனாதீரன் ஆணவம் மேலிட்டவனாய் சபையோரை நோக்கினான். அவனுடைய முரட்டுத்தனமான சுபாவத்தில் "வேறுயாராவது என்னுடன் போட்டியிட விரும்பினால் வரலாம். ஆண்மையுள்ளவர்கள் யாராயினும் வரலாம்" என்று கிண்டலாக கூறினான்.

அதே சமயம் பார்வையாளர்களுடனிருந்த வயோதிபர் ஒருவர் எழுந்து வந்து அரங்கினுள் குதித்தார்.

## 2

திடீரென அரங்கினுள் குதித்த உருவத்தை பார்த்ததும் சேனாதீரன் இடி இடிப்பது போன்று பலமாக சிரித்தான். அவனுடைய சிரிப்பைக் கேட்டே பலர் நடுங்கினர். முதியவர் அரங்கினுள் அரசபரிவாரங்கள் இருக்குமிடத்துக்கு சமீபமாக நின்று "அரசே ஒரு விண்ணப்பம்" என்றார்.

சுருண்ட கேசத்தை மூடியதலைப்பாகையும், இடையிடையே நரை விழுந்த தாடி மீசையுடன் ஆஜானுபாகுவான தோற்றம் கொண்ட அந்த முதியவரைப் பார்த்ததும் "உங்களுக்கு என்ன வேண்டும்" என்று மகீபன் கேட்டான்,

"சேனாதிபதி ஆண்மையுள்ளவர்களாய் இருந்தால் போட்டியிட வரும்படி சாவல் விட்டதால் நான் இங்கு அனுமதி இன்றி வந்து விட்டேன், அதற்காக மன்னிக்க வேண்டும், எனக்கு வயதானாலும் ஆண்மை இருக்கின்றது

என்பதை நிரூபிக்க இப் போட்டியில் பங்குபற்றுகின்றேன். அனுமதி அளிக்க வேண்டும்'' என்றார்.

''தங்கள் பெயர்?'' என்றார் மகிபன்.

''கௌதமன் கௌதமபுரியைச் சேர்ந்தவன்''

''கௌதமரே! சேனதிரனுடன் நீர் பொருதி வெல்ல முடியாது. ரோஷம் மட்டும் இருந்தால் போதுமா?'' மகிபன் கூறினர்.

''ரோஷம் மட்டும் இருந்தால் களத்தில் குதித்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம். அதைக் கூடச் செய்யாமல் ஆண்மையற்றவர்களாய் விளங்கும் இவர்களைப் போல என்னையும் வேடிக்கை பார்க்கச் 'சொல்கிறீர்களா? என்று குத்தலாக கேட்டார் கௌதமன்.

'ஏய் கிழமே என் வாள் வீரர்களிடம் தான் விளையாடும். உம்மைப் போன்ற கிழங்களுடன் பொழுது போக்க நான் தயாராய் இல்லை.' என்றான் சேனதீரன். சேனதிபதி அவர்களே! போரிடாமலே எனக்கு வெற்றி என்று கூறுகின்றீரா?'' என்று இடக்காக கேட்டார் கௌதமன்.

''வாய் வீரம் மட்டும் போதாது கிழவா. வாள் பிடிக்கவும் தெரியணும்'' என்றான் கிண்டலாக.

''வாள் பிடிக்கவும் தெரியும். வீசவும் தெரியும். பேடிகளுக்கு சவால் விடும் சேனதிபதியே உன் பேச்சை நிறுத்தி வீரத்தை செயலில் காட்டு''

''உயிருடன் ஊர்போக விரும்பவில்லை போலிருக்கு. அரசே அயல் நாட்டுக் கிழம் எங்களை அவமதிக்கும் விதத்தில் நடந்து கொள்வதை இனியும் அனுமதிக்க முடியாது'' என்று கத்தினன் சேனதிபதி.

''கௌதமரே. இளைஞர்களோடு போட்டியிட்டு அநியாயமாக ஏன்.........?' என்றார் மந்திரி மாளவர்மர்.

''மந்திரியாரே! நான் பார்வையாளனாகத்தான் வந்தேன். உங்கள் சேனாதிபதி பார்வையாளர்களை பார்த்து ஆண்மையுள்ளவர்கள் இருந்தால் போட்டியிட வரலாம் என்றார். ஜனநாதமங்கலத்து மக்கள் ஆண்மையற்றவர்களானால் நானும் அப்படி இருக்க முடியாது. எனக்கு அனுமதி வழங்குங்கள் போட்டி தொடர அனுமதியுங்கள்'' என்றார் கௌதமர்.

சபையோர் கூச்சலிட்டனர் எங்கும் ஓரே கூக்குரல். கௌதமரை போட்டிக்கு அனுமதிக்கும்படி எல்லோரும் கூக்குரலிட்டனர்.

''ஆண்மையுள்ள கிழமே உன்னை யமபுரிக்கு அனுப்பிவிட்டால் அப்புறம் யாரும் இது பற்றிப் பேச மாட்டார்கள். சேனாதிரனின் வீரம்பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா?' என்றான் சேனாதீரன்.

'' வீரம் மட்டும் இருந்து பலனில்லை தம்பி விவேகமும் வேண்டும். உன் நாவில் சனி இருக்கிறது. இல்லையெனில் நீ பேசாமலே போயிருக்கலாம் உன் பேச்சினால் வந்த வினை இது'' என்று கௌதமர் கூறும் போது போட்டிக்கான மணி அடிக்கப்பட்டது.

கௌதமர் அரங்கின் மையத்துக்கு சென்று வாளை எடுக்கு முன்பே சேனாதிரன்வாள் ரீங்காரமிட்டு சுழன்றது கௌதமன் பயந்து பயந்து போய் வாளை எடுத்து தன் மீது அவன் வாள் பிடிக்காமல் இருக்கும் பொருட்டு தடுத்துக் கொண்டேயிருந்தான்,

''அப்பா'' என்றாள் இளவரசி ஜனனி.

'' என்னம்மா?'' என்றார் மகீபன்.

''கௌதமர் சாதாரண ஆளாயிருப்பார் என்று நான் நம்பவில்லை வாட்பயிற்சி இல்லாதவர் போல் நாடகமாடினாலும் சேனாதிபதியின் வாள் சுழற்சிக்கு முன் அவருடைய தற்காப்பு முறையை பார்த்தீர்களா?''

''என்ன இருந்தாலும் சேனாதிரன் மகாவீரன்'' என்றார் மகீபன்.

''வீரம் மட்டும் இருந்து பயனில்லையப்பா. விவேகமும் வேண்டும்'' என்றாள்.

இதற்கிடையே சபையோர் ஆரவாரம் செய்தனர். கௌதமன் கையாளும் தற்காப்பு முறை சேனாதிரனை சிந்திக்கவைத்தது. தன்னுடன் பொருதும் கிழம் சாதாரணன் அல்லன் என்ற உண்மை விநாடிக்கு விநாடி தெரிய வந்தபோது அவன் மனதில் தளர்வு ஏற்பட ஆரம்பித்தது. எதிரியின் தளர்ச்சியை உணர்ந்த கௌதமன் கை ஓங்கியது வாள் அவன் கையில் நர்த்தனமாடியது. கண் இமைக்கும் நேரத்தில் சேனாதிரனுடைய வாளை ஆகாயத்தில் பறக்க விட்டுப் பாய்ந்து பிடித்தான் கௌதமன்.

சபையோர் ஆரவாரித்தனர். அத்தனை ஆரவாரமும் எரி அம்புகளாக சேனாதிரனை சுட்டுப்பொசுக்கின. பாய்ந்து சென்று மையத்திலிருந்த சூலாயிதத்தைத் தூக்கினான். அடுத்த கணம் வாட்களை வீசினான் கௌதமன். அவனை மையத்துக்கு நெருங்க விடாது சூலாயுதத்தால் குத்தமுனைந்தான் சேனாதிரன். நிராயுதபாணியுடன் போரிடக்கூடாது என்பதைக் கூட மறந்துவிட்டான். மன்னர், மக்கள் எல்லோரும் பயத்தினால் செய்வதறியாது திகைத்து நிற்கையில் அந்த அதிசயம் நடந்தது. யாரும் எதிர்பாராமலே ஒரே பாய்ச்சலாக சேனாதிரனுக்கு மேலாக பாய்ந்த கௌதமன் மையத்தில் வைக்கப்பட்டிருந்த ஈட்டியை எடுத்துக் கொண்டான் எல்லோரும் ஆரவாரித்து கைதட்டினர்.

மூர்க்கத்தனமாக கௌதமனைத் தாக்க முயன்றான் தளபதி. ஆனால் கௌதமனோ சாதாரணமாக விளையாடு பவன் போல விளையாட்டாகவே சூலாயுதத்தை தடுத்தும் தட்டியும் விட்டு விலகி நின்றான். ஈற்றில் சூலாயுதத்தின் கவர்களுக்குள் அகப்பட்டு கொண்ட ஈட்டியை இழுக்க முடியாது போக அப்படியே சுழற்றி தூக்கி வீசினான். அவ னுடைய செயலால் நிலை குலைந்த சேனாதீரன் நிலத்தில் விழுந்தான். அவனால் எழுந்திருக்க முடியவில்லை. ஈட்டி யை தூர வீசிய கௌதமன் ஓடிச் சென்று சேனாதீரனின் கரத்தைப் பற்றி தூக்கி நிறுத்தினான். என்னதான் மூர்க் கனாயிருந்தாலும் கௌதமனின் பண்பாடு நிறைந்த செ யலால் வெட்கித் தலை குனித்தான் சேனாதிரன்.

''சேனாதிபதி வெற்றியும் தோல்வியும் வீரர்களுக்கு அழகு போட்டியில் தோற்றதால் தங்கள் வீரத்தை குறை வாக மதிப்பிட முடியாது. தாங்கள் சிறந்த வீரர்தான்.'' என்று கூறினான் கௌதமன்.

''கௌதமரே! உங்கள் வீரம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. வெறும் ஆணவத்தால் நான் தோற்றேன்; அதைவிட உங்கள் பண்பான உள்ளத்திற்குமுன் நான் மிகமிக தோற்று விட்டேன்'' என்றான் சேனாதீரன்.

''போட்டியில் வென்று விட்டால் மட்டும் வீரனாகி விட முடியாது. சேனாதிபதி சந்தர்ப்பம் தான் வெற்றி களை நிட்சயிக்கின்றது. போட்டி என்பது ஒருவனுடைய திறமையை நிருபிக்கச் செய்யும் இடமல்ல தளபதியாரே இதனால் தங்கள் மனம் குன்றி விடக் கூடாது. நான் பாதி இராட்சியத்துக்கோ அரச குமாரிக்கோ ஆசைப்பட்டு இதில் கலந்து கொள்ளவில்லை என்பது தங்களுக்கு தெரி யும்.'' என்றான் கௌதமன்.

வியப்புடன் அவரைப் பார்த்தான் சேனாதிபதி.

''உங்கள் நாட்டில் என் வீரத்தை விளம்பரப்படுத்த வரவில்லை சேனாதிபதி. உங்களைப் போன்ற ஓர் வீரனிடம்

ஆணவம் இருக்கக் கூடாது. அந்த ஆணவமே உங்களை வீழ்த்தியது. இதை நான் உங்களுக்கு நட்புரிமையுடன் கூற விரும்புகிறேன் சேனாதிபதி'' என்றான் கௌதமன். அவனுடைய செயல் பேச்சு அத்தனையும் உண்மை என்பதை உணர்ந்து கொண்ட சேனாதீரன் அவரைத் தழுவிக் கொண்டான் அவருடைய மன உறுதி போன்றே உடலும் உறுதி வாய்ந்திருப்பதை உணர்ந்து ஆச்சரியப்பட்டான்.

நண்பரே! தங்கள் அறிவுரை எனக்கு ஆனந்தமாகவே உள்ளது. எனக்கு வாட் பயிற்சி தந்த குருவே இப்படி பல தடவை என்னிடம் கூறியிருக்கிறார். வெற்றிகளை மட்டுமே சந்தித்து பழகிப் போன எனக்கு என்னை யறியாத ஓர் ஆணவம் இருந்து வந்துள்ளது என்பதை இச் சந்தர்ப்பத்தில் நான் உணர்கின்றேன் என்றான்

''வயதுக் கோளாறு வாருங்கள் மன்னனிடம் போகலாம்'' என்று கௌதமர் அழைத்தார். அதே சமயம் அவனுடைய கரங்களைப் பற்றி மேலே தூக்கி'' மகாவீரர் கௌதமர் வாழ்க'' என்று வெற்றிக் குரல் எழுப்பினான் சேனாதிபதி. கூட்டத்தினர் கரகோஷம் செய்தனர்.

அதே வேளையில் யாரோ புலிக் கூண்டைத் திறந்து விடவே கூண்டிலடைபட்ட மூன்று புலிகளும் உறுமிக் கொண்டே கௌதமனையும் தளபதியையும் நோக்கி வந்தன.

## 3

சேனாதிபதி சேனாதீரன் வாட் போரில் தோற்றதும். பின்பு சூலாயுதத்தை ஏந்தி மூர்க்கத்தனமாகத் தாக்கியதும் அதே சமயம் கௌதமன் மந்திரவாதி போன்று திடீர் திடீரென அவனைத் தோற்கடித்ததையும் பார்த்து கொண்டு நின்ற உதயவர்மன் மனம் பொறாமையால்

பொருமியது எப்படியும் கௌதமனை ஒழித்துக்கட்டா விட்டால் தங்கள் திட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை என்பதை புரிந்து கொண்டதும் உடனே புலிக் கூண்டை அணுகி யாரும் எதிர்பாராத விதமாக அதனை திறந்து விட்டான். சேனுதிரன் கூட இதனை எதிர்பார்க்கவில்லை. புலிகளின் உறுமலைக் கேட்டு கௌதமனே ஒரு கணம் திடுக்கிட்டு விட்டான்.

அதே சமயம் சேனுதிரன் கௌதமனின் கரங்களை பற்றியவாறே'' நண்பரே! இவைகள் பொல்லாத விலங்குகள் விரைவாக வாருங்கள் படிகளில் ஏறி மேலே போய் விடலாம்'' என்முன். ''சேனுதிபதி நாம் இருவரும் வீரர்கள் எம்மை சோதிப்பதற்காகவோ அன்றி அழிப்பதற்காகவோ இவற்றை யாரோ வெளியில் அனுப்பி யிருக்கிருர்கள் போலும்,, என்முன் கௌதமன். ''இது விஷமிகளின் வேலை விரைந்து வாருங்கள்' என்று கூறி ஓடினுன் சேனுதிரன்.

''கௌதமரே விரைந்து வாருங்கள்'' என்ருர் அரசர் மகிபன்.

ஆனல் எதையும் இலட்சியம் செய்யாமல் பதுங்கி வரும் புலிகளை பார்த்து கொண்டே நின்ருன் கௌதமன் மக்களும் மன்னரும் திகைத்தவர்களாய் பார்த்து கொண்டு நின்றனர். அடுத்த விநாடியே ஒரே பாய்ச்சலாய் பாய்ந்து முன்பு வீசிய ஈட்டியை எடுத்துக் கொண்டான் கௌதமன். அடுத்த விநாடி தன்னை நோக்கி பாய்ந்த புலியின் மார்பை நோக்கி ஈட்டியை வீசினுன், கண் இமைக்கும் நேரத்தில் புலி சுருண்டு விழுந்தது. அது விழுந்ததைப் பார்த்ததும் ஏனைய இரண்டும் அசையாது நின்று வாலை நிலத்திலடித்துக் கொண்டு முன்னங் காலில் ஒன்றைத் தூக்கி நிலத்தை பிருண்டின.

''ம் ம்'' என்று அவைகளை மிரட்டினுன் கௌதமன். அவை பின்னே நகர்ந்து கூண்டை அடைந்தன வாயினும் இமைப் பொழுதில் ஒன்று கௌதமன் மீது

ஆக்ரோசமாகப் பாய்ந்தது "கௌதமரே" என்று சேனாதீரன் பலமாக கத்தினான். யாரும் எதிர்பாராத விதமாக புலி உறுமிக் கொண்டே சுருண்டு விழுந்தது. அதற்கிடையில் காவலர்கள் கூண்டை மூடி விட்டதால் ஒரு புலி கூண்டிலேயே அகப்பட்டுக் கொண்டது. இரண்டாவதாக விழுந்த புலியை சமீபித்த கௌதமன் அதன் தொண்டையில் ஆழமாகப் பதிந்த ஓர் சிறு ஆயுதத்தை இழுத்து எடுத்து அதன் உடலிலேயே துடைத்து விட்டு தன் கழுத்தின் பின்புறமாகச் செருகிக் கொண்டான். சூரிய ஒழியில் அந்த ஆயுதம் பளபளத்து ஒலித்தது' அவனுடைய வீரமும், தீரமுமிக்க செயலால் பிரமிப்படைந்த மக்கள் கூட்டம் ஆரவாரப் பேரொலி எழுப்பியது.

மன்னர் இளவரசி உட்பட மந்திரி பரிவாரங்களும் எழுந்து நின்று அவனை வரவேற்றனர்.

"வீரரே உமது செயற்கரிய செயலால் நாம் பிரமித்துப் போய் இருக்கிறோம். எனது இலட்சியம் நிறைவேற ஆண்டவனே உம்மை இங்கு அனுப்பி இருக்கிறார். வாருங்கள்" என்று இரு கரம் நீட்டி அழைத்தார் மகிபன். மிகப் பணிவுடன் அவர் முன் வந்து வணங்கி நின்றார் கௌதமர்.

"அரசே! கௌதமர் என்னை வெற்றி கொண்டதை யிட்டு நான் கவலைப்படவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் இரு கொடிய விலங்குகளை வீழ்த்திய திறனைக் கண்டு நான் பொறாமைப்படுகின்றேன்" என்று கூறி சிரித்தான் சேனாதிபதி சேனாதீரன்.

"ஆமாப்பா அவர் இரண்டாவது புலியை வீழ்த்தியதுதான் மிகப் பெரிய ஆச்சரியம். அந்த ஆயுதத்தை நாங்கள் பார்க்கலாமா பெரியவரே" என்றாள் இளவரசி ஜனனி "உண்மையாக நானே ஆச்சரியப்பட்டேன்

எனக்கும் அந்த ஆசையிருக்கின்றது கௌதமரே' என்றூர் மகிபர்.

"நன்றி வேந்தே இதோ" என்று பின் கழுத்துப் பக்கமாக கையை விட்டு எடுத்தான் கௌதமன். தேள் வடிவில் அமைக்கப்பட்டிருந்த சிறிய ஆயுதத்தை பார்த்து எல்லோரும் வியப்புற்றனர்.

"கௌதமரே! உங்களோடு போட்டியிட்ட போதே ஏற்படாத பயம் இப்போது எனக்கு ஏற்படுகின்றது" என்றான் சேனுதிபதி.

"வீரன் எதற்கும் பயப்படக் கூடாது சேனுதிபதி' என்று புன்முறுவல் பூர்த்தான் கௌதமன்.

"நிராயுதபாணியாக நின்ற உம்மை சூலாயுதத்தால் நான் தாக்க முயன்ற போது இதனை நீர் பிரயோகித்திருந்தால் ......" என்ற சேனுதிபதி அச்சத்தால் நடுங்கியே விட்டான்.

"எதற்கும் ஓர் தர்மம் உண்டு சேனுதிபதி. ஒன்றுக்கு மேற்பட்ட வலிமையுடையோர் என்னைத் தாக்க முனைந்து எனக்கு ஆபத்து நேரும் எனக் கண்டால் அன்றி இதனை நான் எடுத்துப் பாவிக்க மாட்டேன் இது என் குருநாதரின் கட்டளை" என்றான் கௌதமன்.

"கௌதமர் வாழ்க" என்ற ஒலி வானைப் பிளக்குமளவுக்கு ஒலிக்க அரசர் தன் கழுத்திலிருந்த ஓர் நவரத்தின மாலையை கழற்றி அவனுக்குச் சூட்டினூர்.

"நன்றி மன்னவா" என்று கரம் கூப்பி வணங்கியவன் எல்லோருக்கும் தனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டான். "அரச பெருமானே! கௌதமரே! ஜனநாதமங்கலத்து பெருமக்களே இதுவரை நாள்

எனக்கு இருந்த ஆணவம் இன்றுடன் முடிவுற்று விட்டது. இந் நாட்டின் அதி சிறந்த வீரருக்கான விருதுப் பட்டம் என் இனிய நண்பர் கௌதமருக்கு வழங்கப்பட வேண்டும் என மனப்பூர்வமாக கூற விரும்புகின்றேன்'' என்று சேனதீரன் கூறிய போது மக்கள் ஆரவாரம் செய்து கோஷமிட்டனர்.

''மன்னர் மகிபருக்கும், மந்திரியார், சேனதிபதிக்கும் ஜனநாதமங்கல பெருமக்களுக்கும் என் அன்பு வணக்கம். இந்த நாட்டின் உயர்ந்த வீர விருது உங்கள் நாட்டுச் சேனதிபதிக்கே என்றும் உரியது. நான் போட்டியில் வெற்றியீட்டியதற்கான பரிசும் பாராட்டும் உங்கள் அன்பான வாழ்த்து மூலம் பெற்றுக் கொண்டேன். சேனதிபதியின் வீரத்திற்கு இந்த நாட்டின் பண்பாடே காரணம். நான் பரிசு பெறும் நோக்குடனே இராவணன் கோட்டை மர்மத்தினை காண போக வேண்டும் என்றோ இங்கு வரவில்லை. ஆகவே எல்லோரும் எனக்கு விடைதர வேண்டுகின்றேன்.'' என்ருன் கௌதமன்.

''கௌதமரே! நீங்கள் விரும்பினுலும் நாங்கள் உங்களை விடப் போவதில்லை. எங்கள் விருந்தாளியாக ஒரு வார காலம் தங்குவதுடன் என் இலட்சியத்தையும் பூர்த்தி செய்ய வேண்டும் என மிகப் பணிவுடன் ஜனநாதமங்கல மக்கள் சார்பில் வேண்டிக் கொள்கின்றேன். என்ருர், அரசர் மகிபர்.

"ஆம் ஆம்'' என்று மக்கள் கோஷமிட்டனர்,

''தங்கள் விருப்பம் போல ஆகட்டும்'' என்ருர் கௌதமர். மக்கள் கரகோஷம் செய்தனர்.

அரண்மனை விருந்தினர் மண்டபத்தில் சகல மரியாதைகளுடனும் தங்கினர் கௌதமர். அவரது ஊரைச் சேர்ந்த வாமனன் என்ற ஒரு நண்பனும் அவருடனே

தூங்கியிருந்தான். வாமனன் பெயருக்கேற்ப குள்ளமாக கவும் பருமனாகவும் காணப்பட்டான். கௌதமரின் உற்ற நண்பனாகவும் மெய் காப்பவனாகவும் விளங்கினான் வாமனன்.

மறுநாட் காலையில் அரசர் அழைத்து வரும்படி காவலர் தலைவன் வந்து கௌதமரை அழைத்துச் சென்றான். கௌதமன் அங்கு சென்ற வேளையில் அரசரின் பிரத்தியேக அறையில் மந்திரிமாளவர்மரும். வயது முதிர்ந்த ஓர் பௌத்த பிட்சுவும் காணப்பட்டனர். கௌதமனை வரவேற்று மகீபர் புத்த சந்நியாசியை அறிமுகப் படுத்தி வைத்தார். அவருக்கு வணக்கம் செலுத்தினான் கௌதமன்.

''சர்வ வல்லமையும் கிடைக்கட்டும் மகனே'' என்று ஆசி கூறினார் பிட்சு நாகநந்தி அடிகள்

''கௌதமரே! நீங்கள் எதற்காக வந்தீர்களோ நான் அறியேன். ஆனாலும் ஆண்டவனே உங்களை அனுப்பி வைத்துள்ளதாக நான் நம்புகிறேன். இதோ இங்கே வீற்றிருக்கும் பௌத்த குருவானவர் மூலிகை ஆராய்ச்சி செய்யும் பொருட்டு சில வருடங்களுக்கு முன் மகேந்திர பாவதம் என்னும் மலையடிவாரத்துக்குச் சென்றார். அங்கே சொர்ண காந்தி எனனும் ஓர் அற்புத மூலிகையை தேடிச் சென்று கொண்டிருந்தவர் அந்தச் செடியை வேருடன் கொண்டுவர எண்ணி கடற்பாறையில் குழி தோண்டினார் அப்போது ஏதோ சிறிய இரும்புப் பெட்டி ஒன்று தட்டுப் படவே குழியை விசாலமாக்கி பெட்டியையும் எடுத்து வந்தார். தன்னுடைய வசிப்பிடமான விகாரத்துக்கு வந்ததும் பெட்டியை திறந்து பார்த்தபோது இந்த ஓலைச் சுவடிக்கட்டு அதனுள் வைக்கப்பட்டிருந்தது. அதனைப் படித்துப் பார்த்த போது இராவணன் கோட்டை பற்றி தெரிய வந்தது. இதோ வரை படங்களும் இருக்கின்றன ஆனால் இது பற்றி பலர் ஆராய்ந்தும் இன்னும் அந்தக் கோட்டையைக் கண்டு பிடிக்கவில்லை உம்முடைய வீரமும். விவேகமும் நிட்சயம் நீங்கள்

இதனை கண்டு பிடிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக் கிருக்கின்றது'' என்றார் அரசர் மகிபன்.

''நன்றி வேந்தே இந்தப் பணியை நான் ஏற்றுக் கொள்கின்றேன். சுவாமி சில சந்தேகங்களை நான் கேட்க லாமா? என்று பிக்குவைப் பார்த்தான்.

''கேள் மகனே''

''மந்தாகினி ஆற்று ஓரத்தில் நாகர்கள் வசிக்கின்ற நாடுகள் இருக்கே அதனை தாண்டியல்லவா மகேந்திர பர்வதம் இருக்கின்றது. அங்கே போவது அவ்வளவு சுலபமல்லவே. மீறிப் போனால் நாகதேவனுக்கு பலி கொடுத்து விடுவார்களே'' என்ற கெளதமன் புத்த சந்நியாசியின் முகத்தை உற்று நோக்கினான்.

## 4

விருந்தினர் மண்டபத்தில் தங்கி இருந்த வாமனன் ஆழ்ந்த யோசனையில் இருந்தான். அதே சமயம் அங்கு வந்த உதயவர்மன் தனித்திருந்த வாமனனைக் கண்டதும் அவனிடம் ஏதாவது விடயமறியலாம் என நினைத்து ''என்னண்ணே தனியாக இருக்கிறீங்க'' என்றான்.

''வேறு எப்படி இருக்க வேண்டும் என நினைக்கி றீங்கள் உபதளபதியாரே'' என்றான் வாமனன்.

''கிண்டலாகப் பேசுவதில் கெளதமபுரிக்காரர்கள் வல்லவர்களாய் இருப்பார்கள் போலும்'' என்றான் உதயவர்மன் ''கிண்டலாகப் பேசுவோம் சந்தர்ப்பம் கிடைத்தால் வீரத்தையும் காட்டுவோம் வீரனைக் கொல்ல மிருகங்களை ஏவி விடமாட்டோம்'' என்றான் வாமனன் குத்தலாக.

''அடடே நீங்கள் இன்னமும் அந்த நினைவில் தான் இருக்கிறீர்களா? அது தற்செயலாக நடந்தது.

''நீங்கள் அப்படிச் சொன்னாலும் உயர்மட்டத்தில் உள்ள ஒருவரால் செய்யப்பட்டதாக பேச்சு அடிபடுகின் றது'' என்றான் வாமனன்

உதயவர்மன் திடுக்கிட்டான். தன்னுடைய ஆத்தி ரத்தினுல் செய்யப்பட்ட வேலை வெளியே தெரியவந்து விட்டதே என பயந்தான். கௌதமனைக் கொல்ல நினைத்து தளபதி சேனதீரனையுமல்லவா கொலை செய்யப் பார்த்தேன். நல்லவேளை அப்படியொன்றும் நடக்கவில்லை என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

''அதுசரி வாமனரே! நீங்கள் இராவணன் கோட்டைக்குப்போகிறீர்களா?'' என்ருன் பேச்சை மாற்றி

''அதுபற்றி தீர்மானிப்பது கௌதமரின் வேலை.

''நீங்களும் போவீர்களா?''

''கௌதமர் எங்கு சென்ருலும் நானும் நிழல்போல பின் தொடர்வேன்''

''இராவணன் கோட்டை என்பது என்ன என்றே யாருக்கும் தெரியாது. அப்படியிருக்க ஒரு வீரன் மடைத்தனமாக அங்கே போய் ஏன் உயிர் விடணும்''

''உபதளபதியாரே! வார்த்தைகளை கவனமாக பேசும் கௌதமர் மகாவீரபுருஷன். அவர் முன்வைத்தகாலைப் பின் வைக்க மாட்டார். அவரிடம் வீரம்மட்டுமில்லை விவேகமுமிருக்கு. வித்தைகள் பல பயின்றவர் உங்கள் அரசரின் இராவணன் கோட்டை மர்மம் அம்பலமாகத் தான் போகிறது'' என்ருன் வீராவேசமாக.

''அண்ணே! நான் உங்களை குறைவாக மதிப்பிடவில்லை. கௌதமரின் திறமையால் சிலவேளை இராவணன் கோட்டை மர்மம் வெளியாகலாம்'' என்ருன்.

''சிலவேளை என்ன. நிட்சயமாக வெளியாகத்தான் போகின்றது பாருங்களேன்'' என்ருன்.

''அப்படியானுல் பாதி இராட்சியமும் அரசகுமாரியும் கிடைக்கும். உங்களுக்கும் உயர்பதவி கிடைக்கலாம் இல்லையா?''

''உபதளபதியாரே! உங்கள் பாதி இராட்சியமும், இராசகுமாரியும் கௌதமருக்கு தேவையில்லாதவை. அவர் நினைத்தால் எங்கள் நாட்டிலேயே மன்னராக

முடியும். அவருக்கு பேராசை கிடையாது. நல்லவர்களுக்கு நல்லவர் கெட்டவர்களை சும்மா விட மாட்டார். உங்கள் தளபதி போன்ற மகாவீரர்கள் பத்துப்பேரையும் ஒரே சமயத்தில் பரலோகம் அனுப்பக் கூடிய வீரர்'' என்றான் வாமனன்.

''உண்மைதான் அண்ணே! அந்தப்படலியை அப்படி வீழ்த்தியவர் எப்படிப்பட்ட வீரர் என்று மற்றவர்கள் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? அதுசரி அண்ணே அந்தத் தேள்வடிவக் கத்தி வீச்சு உங்களுக்கும் தெரியுமா?'' என்று அந்தப் புதிய ஆயுதம் பற்றிய மர்மத்தை அறிந்து கொள்ள விரும்பினான்.

''ஓ அதுவா? அது ஒரு பயங்கர ஆயுதம் அதை அனாவசியமாகப் பாவிக்க மாட்டார் கௌதமர். தன் உயிருக்கு ஆபத்து எனக் கண்டால் மட்டுமே அதனை பிரயோகிப்பார். அந்த வித்தை அவருக்கு மட்டுமே தெரிந்த ஒன்று நாங்கள் பாவித்தால் எங்கள் உயிருக்கே ஆபத்தாக மாறி விடும்' என்று அவன் கூறும்போது உதயவர்மன் முகத்தில் மரணபீதி நிலவியது.

மந்தாகினி நதி பற்றியும் நாகர்கள் பற்றியும் கௌதமன் வினவிய சந்தேகங்களை போக்க முயன்றார் பௌத்த சந்நியாசி.

''மகனே! நாகர்கள் தங்கள் பிரதேசத்தில் அத்து மீறி நுழையும் அன்னியர்களை நாக தேவனுக்கு பலி கொடுப்பது என்னவோ உண்மைதான். அவர்கள் தான் மகேந்திர பர்வதத்துக்கு மற்றவர்கள் செல்லாமல் காவல் புரிபவர்களாகவும் விளங்குகின்றார்கள். ஆனாலும் மந்தாகினி நதியில் பிரயாணம் செய்து அதன் அடிவாரத்தை அடைய என் போன்ற வீரர்களால் முடியும் அதுமட்டுமன்றி தங்களை விட சிறமைசாலியான ஓர் வீர புருஷனை நாகர்கள் வணங்குவார்களே தவிர கொல்லத் துணியமாட்டார்கள். உன் போன்ற விவேகமும் வீரனும இவர்களைச் சமாளிப்பது சுலபம் என்றே நினைக்கின்றேன்'' என்று கூறினார்.

''சுவாமி சொர்ணகாந்தி மூலிகை பற்றி... ''

''ஆமாம் மகனே இதோ'' என்று ஓர் இலையை எடுத்துக் காட்டினார். காய்ந்து விட்டாலும் அந்த இலையின் பசுமையும அழகும் தங்கம் போன்ற நிறமும் கௌதமனின் உள்ளத்தைக் கவர்ந்தன.

''இதன் விசேடம் என்ன நான் தெரிந்து கொள்ள லாமா சுவாமி?''

''நிச்சமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் ஏனெ னில் உபபோன்ற வீர புருஷனுக்கு இது அவசியம் எந்த ஒரு காயத்தையும் சில விநாடிப் பொழுதுகளில் மாற்றக் கூடிய ஆற்றல் இந்த மூலிகைக்கு உண்டு மகனே என்றார்.

வியப்பால் விரிந்தன கௌதமரின் விழிகள். இப்படி ஓர் அபூர்வ மூலிகையைப் பறித்துவந்த சந்நியாசி இராவணன் கோட்டை பற்றிய செய்தியைக் கொண்டு வந்தது பற்றி அவன் அதிர்ச்சி அடையவில்லை அந்த இலையை அவரிடம் திரும்பக் கொடுக்க முனைந்தான்.

' மகனே இது உன்னிடம் இருப்பதே நல்லது. இந்தச் செடியைக கண்டு கொண்டால் நிறையப் பறித்து வா. அதுவே நீ எனக்கு தரும் பெரும் நிதியம்'' என்று அவனை ஆசீர்வதித்தார்

''சுவாமி இன்னொரு விடயம்''

''சேள் மகனே''

''இராவணன் கோட்டையில் என்ன இருக்கும்? எதையாவது எடுத்துவர வேண்டுமா? அங்கே அபூர்வ மான பொருட்கள் ஏதும் இருக்குமா?'' என்றான்.

''இருக்கலாம் மகனே. இராவணன் பத்துத் தலை களோடு உயிருடன் இருப்பதாக சுவடியில் காணப்படு கின்றது. ஆனல் அதை என்னால் நம்பமுடியவில்லை இரா வணனைப்போல ஏதோ ஓர் அபூர்வ சிருஷ்டி அங்கே இருக்கலாம் என்பதே என்யூகம். இந்த நாட்டின் வறுமை பிணியைப் போக்கக் கூடிய பெரும் நிதியம் ஏதேனும் இருக்கலாம்.'' என்றார்.

"அப்படியாயின் நிட்சயமாக நான் யாவற்றையும் இங்கு கொண்டு வருவேன், மக்கள் வாழ்வு சுபீட்சமடையுமானல் இராவணண் கோட்டையை அப்படியே பெயர்ந்து கொண்டு வ்ர முடியுமானலும் அதற்கு வேண்டியவற்றைச் செய்வேன்'' என்ருன்.

சில விநாடிகளில் மகிபனிடமும் பௌத்த சந்நியாசியிடமும் விடை பெற்றுக் கொண்டு தன் இருப்பிடம் நோக்கி புறப்பட்டான் கௌதமன்.

மந்திரி மானவர்மர் ஆழ்ந்த யோசனையில் இருந்தார் அவர் எதுவும் பேசாதிருப்பதைப் பார்த்த மன்னர் மகிபர்'' என்ன மந்திரியாரே ஒரே சிந்தனையில் ஆழ்ந்து விட்டீர்கள்'' என்ருர்.

''அரசே! கௌதமனைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?'' என்ருர் புன்முறுவலுடன்.

''வீரன் விவேகி, எதையும் செய்யக் கூடிய ஆற்றலுள்ளவன்'' என்ருர் மன்னன்.

''அது மட்டுமில்லை மன்ன இன்னும் ஒரு முக்கியமான விடயம் இருக்கிறது கௌதமன் சாதாரண குடிப் பிறந்தவனுக இருக்க முடியாது. ஏதோ காரணத்துக்காக நடிக்கின்ருன்''

''என்னல் நம்ப முடியவில்லை.' என்ன காரணத்துக்காக அப்படி நடிக்க வேண்டும்?'' என்று வியப்புடன் கேட்டார் மகிபன்.

''வேற்று நாட்டு இளைஞர்கள் விழாவில் கலந்து கொள்ள முடியாதபடி நமது தளபதி இரகசியமாக காவல் வீரர்களுக்கு உத்தரவிட்டிருந்தார் என ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்தனர். ஆகவே தளபதியின் கொட்டத்தையடக்கவே கௌதமன் மாறுவேடத்தில் நகருக்குள் புகுந்திருக்கின்ருன்'' என்ருர்.

''எது எப்படியானுலும் பரவாயில்லை. நமது குழப்பத்திற்கு ஒரு முடிவு வந்திருக்கின்றது'' என்று மகிழ்ச்சியடைந்தார் மகிபன்.

கௌதமனைக் கண்டதும் புன் சிரிப்புடன் எழுந்த வாமனன் அவனுடைய காதிற்கு மட்டும் கேட்கும்படியாக ஏதோ இரகசியமாகக் கூறினுன்.

''அப்படியா? சூழ்ச்சிக்காரனுகத்தானிருக்க வேண்டும். தளபதிக்கும் சூழ்ச்சி தெரிந்திருக்கலாம். ஆனுல் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் விழுத்த உதயவர்மன் விரும்பியிருக்கலாம் எதற்கும் நீ அவதானமாக இருக்க வேண்டும். நாம் இங்கிருக்கும் வரையில் எம்மை பற்றி யாரும் சந்தேகிக்காத வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். நாம் புறப்படுவதற்கு முன்னர் சேனுதிரனைச் சந்தித்து விட்டே செல்ல வேண்டும்'' என்ருன் கௌமன்

அதே வேளையில் தளபதி சேனுதிரன் முன் தலை குனிந்து நின்றிருந்தான் உதயவர்மன். சூட்சும புத்தியுடைய சேனுதிரன் உதயவர்மனுடைய கபட எண்ணத்தைப் புரிந்து கொண்டான். அவனுடைய கேள்விக்கு பதில் கூற முடியாது திகைத்து நின்ற உதயவர்மன் ''தளபதியாரே! நீங்கள் எப்படியும் நினைக்கலாம். நான் தங்களுக்கு துரோகம் நினைக்கவில்லை என்பதை மட்டும் நம்புங்கள். கௌதமன் ஒரு கபட வேடதாரி. அவன் யார் என்பதை இன்று விடிகாலையில் உங்களுக்குப் புரிய வைக்கின்றேன்'' என்ருன்.

## 5

நான்காவது சாமம் கோட்டை மணி ஒலித்ததும் மந்திரி மாளவர்மருடைய மாளிகையை நோக்கி வேகமாக ஓர் உருவம் சென்றது தீவர்த்தி ஒளி மங்கலாகத் தெரிந்ததால் வாசலுக்கு காவல் நின்ற வீரன் தனக்குச் சமீபமாக வந்து விட்ட உருவத்தைக் கண்டதும் பயந்து விட்டானுயினும் அடையாளம் தெரிந்து கொண்டதும் புன்னகை பூத்து வரவேற்ருன். விடயமறிந்ததும் அவனை உள்ளே அனுமதித்தான்.

அகால வேளையில் தன்னை யாரோ அவசரமாக அழைப்பதாக மணி ஒலித்ததும் திடீரென எழுந்து ஓடி வந்தார் மாளவர்மர். நாட்டின் முதன் மந்திரியை எந்நேரமும் அழைக்க வேண்டி வரும் என்பதற்காக அவருடைய சயன அறை வாசலில் மணி கட்டப்பட்டிருந்தது.

அதை அடிக்கச் செய்தே அவரை துயில் எழச் செய்தது அந்த உருவம் வெளியே வந்த மந்திரியார் வாசலில் நின்ற உருவத்தைப்பார்த்ததும் முதலில் திகிலடைந்தா ராயினும் சமாளித்துக்கொண்டே "வாருங்கள் கௌதமரே இந்த வேளையில் எதற்காக என்னை நாடினீர்கள்?" என்றார்.

"மந்திரியாரே! ஆலோசனைக் கூட்டத்தில் தாங்கள் மௌனம் சாதித்தீர்கள் நானும் உங்களோடு பேச வில்லை. ஆனாலும் உங்கள் மனதில் புதைந்துள்ள இரக சியங்களையும் நான் அறிவேன் நான் இப்பொழுதே புறப்பட வேண்டும். தங்களிடம் கூறி விடைபெற்றுப் போகவே வந்தேன்" என்றான்.

புன்னகை பூத்தார் மாளவர்மர் கௌதமனின் அறிவாற்றல் அவரைக் கவர்ந்தது. அவனுடைய முன் னெச்சரிக்கை அவன் விவேகத்துக்கு முத்திரை குத்துவதா யிருந்தது. தன் மனக்கருத்தைக் கூட அறிந்து கொண்ட அவனுடைய நுண்ணறிவையும் மனதிற்குள் பாராட்டி யவாறே "அப்படி என்ன அவசரம் நேர்ந்துவிட்டது. கௌதமரே" என்றார்.

"உங்கள் அரண்மனைக்குள்ளே துரோகிகள் சிலர் இருக்கின்றார்கள். அவர்களை இனம் காண்பதும் கியமான தங்கள் செயல். மன்னர் பிடிவாதக்காரர். அவரிடம் கூறிவிட்டு புறப்படமுடியாது நான் இரகசியமாகவே எனது பயணத்தை தொடங்குவதுதான் நல்லது என நினைக்கின்றேன். அதற்கு இதுதான் ஏற்றநேரம். தங் கள் ஆசியுடன் புறப்பட விரும்புகின்றேன் மன்னருக்கு கூறிவிடுங்கள்" என்றான்.

"நல்லது கௌதமரே! உங்கள் விவேகம், வீரம், அறிவு, பொறுமை, யாவும் உங்கள் உயர்வுக்கும் வெற் றிக்கும் படிக்கற்களாகும். எனது மனப்பூர்வமான ஆசி கள் வெற்றியோடு திரும்புங்கள்" என்றார்.

"தாங்கள் ஏதும் ஆலோசனை கூறவேண்டியிருப்பின் கூறுங்கள் எனக்கு தங்கள் மௌனம்தான் மனதை உறுத்துகின்றது." என்றான் கௌதமன்.

''கௌதமரே தங்களுக்கு தேவையான ஆலோசனைகள் யாவும் நாகநந்தி அடிகளே கூறிவிட்டார் தங்கள் வரவுக்காக நான் நாட்களை எண்ணிக் கொண்டிருப்பேன். அத்துடன் தங்கள் பிரயாணம் பற்றி நான் அறிந்து கொள்ளவும், தங்களுக்கு உதவிகள் வேண்டின் செய்தியனுப்பவும் இந்தா இந்தப் புறாக்களை கொண்டு செல்லுங்கள். தங்கள் தாயார் தங்களைப் பற்றி அறிந்து கொள்ள துடித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தியும் படுக்கைக்கு போகும்போதுதான் கிடைத்தது. என்ன செய்தி அனுப்ப வேண்டும்?' என்று அவர் கூறக்கேட்ட கௌதமன் திகைப்புடன் பேசும் சக்தியற்றவனாய் அவரையே உற்றுப்பார்த்தான்.

''என்ன கௌதமரே திகைத்து விட்டீர்களா? இவற்றைக் கூட என்னால் அறிந்து கொள்ள முடியாது போனால் நான் இந்நாட்டின் முதன் மந்திரியாயிருப்பதற்கே தகுதியற்றவனாகி விடுவேன். இல்லையா கௌதமரே?'' என்றார் புன்சிரிப்புடன்,

''மந்திரியாரே! தங்களைப்போன்ற மதியூகிகள் இருக்குமிடத்தில் புல்லுருவிகளும் இருக்கின்றார்களே'' என்றான் கௌதமன்.

''சுவர்ணகாந்திச் செடி முளைக்கும் நிலத்தில் விஷச் செடி முளைக்கத்தானே செய்கின்றது. நீங்கள் ஏன் இப்படி வந்தீர்கள் என்பதும் தெரிந்து கொண்டேன். ஆனால், யாருக்கும் விடயத்தை வெளியிடவில்லை''

''நன்றி மந்திரியாரே! நான் யார் என்பது தெரிந்தால் என்மீது அன்புகாட்டும் சேனாதிபதிகூட பகைவனாகி விடக்கூடும். ஆகவேதான்..''

''புரிகின்றது கௌதமரே! நீங்கள் வெற்றியோடு வாருங்கள். இதோ புறாக்கூடு இதையும் எடுத்துச் செல்லுங்கள். சேனாதிபதி வீரனே தவிர விவேகியல்ல உதயவர்மன் சேனாதிபதியையும் கெட்டவனாக்கி விடுவான். சிலர்மனம் திடீர் திடீர் என நடப்பவற்றைக் கொண்டு மாறும் இயல்பு கொண்டது. அப்படிப்பட்ட மனப்பாங்

குடையவன் சேனதிபதி ஆகவே தாங்கள் எடுத்த முடிவும் நல்லதுதான்'' என்றார் மாளவர்மர்.

அவரிடம் ஆசியும் விடையும் பெற்றுப் புறப்பட்டான் கௌதமன்.

விடிவதற்கு சிலநாழிகைக்கு முன்பாகவே துயில் நீங்கி எழுந்த உதயவர்மன் கௌதமனின் இருப்பிடம் நோக்கி விரைந்தான் விருந்தினர் மண்டபம் காலியாகக் கிடந்ததைப் பார்த்துத் திடுக்குற்றான் அதிகாலையில சுறுசுறுப்புடன் விளங்கும் விருந்தினர் மண்டபம் சோம்பிக் கிடந்தது. உதயவர்மனுக்கு வியப்பு ஒருபுறம் -ஏமாற்றம் ஒருபுறம் செய்வதறியாது திகைத்து நின்றான். கௌதமனிருந்த மாளிகையின் அறைக்கதவில் ஓர் ஓலை நறுக்கு தொங்கிக் கொண்டிருந்தது. அவரமாக அந்த ஓலைநறுக்கை எடுத்துக் கொண்டு விரைந்து தீப்பந்தம் செருகியிருந்த இடத்துக்கு சமீபமாகச் சென்று அவசரமாகப் படித்தான்.

''உதயவர்மா! என்னையும் சேனதிரனையும் போட்டிக் களத்தில் தந்திரமாகக் கொல்ல நினைத்தாய் உன் எண்ணம் பலிக்கவில்லை. உன் சூழ்ச்சியினால் நல்லவனை தளபதி சேனதீரனுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முனைகின்றாய். என்னை வேவுபார்க்க முனைகின்றாய் ஆகவே நான் உனக்கு ஓர் முன்னெச்சரிக்கையாக அறிவித்தல் தருகின்றேன். இராவணன் கோட்டை நோக்கி நாம் புறப்பட்டு விட்டோம். எம்மை தொடர முனைந்தால் உன் முடிவுக்கு நீயே பொறுப்பை தேடிக்கொள்ள நேரிடும். கீழே தேள் வடிவ முத்திரை வரையப்பட்டிருந்தது. அதனைப்பார்த்த உதயவர்மனின் இரத்த நரம்புகள் யாவும் சில்லிட்டு விறைத்தன தன்னுடைய கபட நாடகத்தைப் புரிந்து கொண்ட கௌதமனிடமிருந்து இப்படி ஒரு எச்சரிக்கை அறிவித்தலை அவன் எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வதென்று அறியாது தடுமாறினான். சில விநாடிப் பொழுதில் தன்னை சுதாரித்துக் கொண்டு சேனதிபதி மாளிகை நோக்கி சென்றான்.

''சேனாதிபதி மாளிகையில் அவன் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. அதிகாலையில் கௌதமனைப் பற்றி" சில உண்மைச் செய்திகளுடன் வருவதாகச் சொல்லியிருந்த உதயவர்மனை எதிர்பார்த்திருந்தான் சேனாதீரன். திடீரென மந்திரிமாளவர்மர் அங்கே விஜயம் செய்ததும் திடுக்கிட்டு விட்டான்- சேனாதிபதி. ஆனாலும் சமாளித்துக் கொண்டே வரவேற்றான்.

''மதிப்புக்குரிய மந்திரியார் அதிகாலையிலே என்னைத் தேடி வந்திருக்கின்றீர்கள். சொல்லி யனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே'' என்றான் சேனாதீரன்.

''தங்கள்மீது உள்ள தனிப்பட்ட மதிப்பும்- அன்புமே தங்களை தேடிவரத் தூண்டியது. கௌதமன் இரவு புறப்பட்டுச் சென்றுவிட்டார்.''

''கௌதமன் புறப்பட்டு விட்டாரா? ஆச்சரியத்துடன் கேட்டான் சேனாதீரன்.

ஆமாம் தங்களுக்கு அறிவிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். அதற்காகவுமே நான் புறப்பட்டுவந்தேன்''

''நன்றி மந்திரியாரே! அப்படி அவசரப்பட்டு புறப்படும்படி என்னநேர்ந்தது கௌதமருக்கு?''

சூழ்ச்சிதான் கௌதமருக்கு எதிராகயாரோ சூழ்ச்சி செய்வதாகவும், அவரைக்கொலை செய்யமுயல்வதாகவும். தன்னை வேவு பார்ப்பதாகவும் அவரே கூறினார்.''

''நமதுஆட்களா?'' என்று வியப்புடன் கேட்டான்.

''நமது ஆட்கள்தான். தங்களிடம் மதிப்பு வைத்திருக்கும் காரணத்தால் தங்களின்கீழ் உள்ளவர்பற்றி தானே கூறுவது சரியல்ல என்பதால் என்னிடம் கூறி விட்டுப் புறப்பட்டு விட்டார்''

''என் படையில் உள்ளவர்களா.. ...?''

''நான் எதையும் மறைக்கவில்லை சேனாதிபதி. உதயவர்மன் பேராசைபிடித்தவன் உங்களையே கொலை செய்ய முயன்றவன். உங்கள் நல்ல மனதை தன் சூழ்ச்சிக்கு பயன் படுத்தி நாடகமாடுகின்றான். சாதுரியமாக அவன் சதுரங்கமாடுகின்றான். முடிந்தால்.... உங்களையே

நகர்த்திவிட்டு தங்கள் இடத்திலிருக்கவும் திட்டமிட்ருக்கின்றான்." "நடக்கக்கூடிய காரியமா ஐயா?" என்று பலமாகச் சிரித்தான்.

"ஏன் முடியாது அன்று போட்டிக்களத்தில் நடந்தது என்ன?" திடுக்கிட்டான் சேனதீரன். அவனுடைய மூளை சுறுசுறுப்படைந்தது. அவன் முகத்தில் சிந்தனைக் கோடுகள் படர்ந்தன மந்திரியாரை உற்று நோக்கினன்.

"மந்திரியாரே! உதயவர்மன் இதனல் அடையப் போகும் பலன்?"

"சிறுபிள்ளைகூடக் கூறுமே தளபதியாரே தங்களுக்கு அடுத்த தளபதியாக இருக்கும் ஒருவன் முறைப்படி வரமுடியாத பதவியை முறைகேடாக அடைய முடியும். கௌதமரை பின்தொடர்ந்து அவர் காணப் போகும் மர்மங்களைத் தெரிந்துகொண்டு அவரை தீர்த்துக்கட்டிவிட்டால் பாதி ராட்சியமும்.. "

"போதும் ஐயா போதும் நான் எதையும் இலகுவில் நம்பிவிடுபவன். அது மட்டுமல்ல போர்க்கலையில் உள்ள நுணுக்கங்களை அறியுமளவிற்கு இருக்கும் ஆற்றல் மற்றவற்றில் இல்லாமல் போய்விட்டதே" என வருந்தினன்.

"நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன, அவற்றையும் கூறுகின்றேன்" கேளுங்கள் என்றார் மாளவர்மர். ஆவலுடன் கூறப்போவதை எதிர்பாத்திருந்தான் சேனதீரன்.

## 6

சேனுதிபதி மாளிகையின் ஆலோசனை அறையில் நடைபெற்ற உரையாடல்களை மறைந்து நின்று கேட்டுக் கொண்டு நின்ற உதயவர்மன் பாதகேசம் நடுங்கலானன். தன் கபட நாடகம் சேனதீரனுக்கு வெளியாகி விட்டது இனி தன்னுடைய சூழ்ச்சி எடுபடாது என நம்பினன். அடுத்த கணம் அவன் மூளை சுறுசுறுப்பாக

வேலை செய்யவே அவ்விடத்தை விட்டகன்றான்.

"சேனாதிபதி தங்கள் குழந்தையுள்ளத்தைக் கெடுத்து சில ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளான் உதய வர்மன் வீரத்தின் விளைநிலமான தங்கள் மனதில் வேறு சிந்தனைகள் படியாவண்ணம் உதயவர்மன் தானே சில முடிவுகளை எடுத்து தங்களையும் திசை திருப்பி விட்டி ருக்கின்றான். நடந்து முடிந்த போட்டி அதனை உறுதிப் படுத்தி விட்டது ஆனாலும் விவேகியான கௌதமனின் பண்பட்ட செயல் உங்கள் இயல்பான மனதை ஆக்கிர மித்து விட்டதால் அவரை நீங்கள் நண்பனாக மதித்தீர் கள். அதனைக் குழப்பவே உதயவர்மன் முயன்றான். எப் படியோ இவற்றையெல்லாம் அறிந்து கொண்ட கௌ தமன் சலசலப்பு ஏதுமின்றி தன் பணியை ஆரம்பித்து விட்டார்'' என்றார்.

''மந்திரியாரே! ஆசை யாரைத்தான் விட்டது? உத யவர்மனுடைய சில ஆசை வார்த்தைகளால் என்இளமை யுள்ளமும் சலனப்பட்டு விட்டது. தர்மத்துக்கு அப்பா லும் விலகி நடந்து கொண்டேன். ஆனால் எதிரியையும் நண்பனாக மதிக்கும் கௌதமனின் பண்பு என் மனத்தில் படிந்திருந்த களங்கத்தைத் துடைத்தெறிந்து விட்டது. நீங்கள் கூறுவதை பார்த்தால் கௌதமர் சாதாரண குடும்பதது ஆளாக தோன்றவில்லை'' என்றான்.

''உண்மைதான் சேனாதிபதி. அவர் பெரிய குடும் பத்துப் பிள்ளை உங்களுடைய சட்டத்தை உடைத்தெ றிய மாறுவேடத்தில் வந்தவன்''

''வெட்கப்படுகின்றேன் மந்திரியாரே. வேதனைப்படு கின்றேன். என் வீரத்தைக்கூட மாற்றான் தரக்குறைவாக நினைக்குமளவிற்கு என் மனதை மாசுபடுத்திக் கொண் டேன். கௌதமனுருவில் ஆண்டவனே எனக்குபாடம் படிப்பித்து விட்டார். என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கண் கலங்கினான் சேனாதிபதி.

சேனாதிபதி! தங்களை நன்கு உணர்ந்தவன் என் ப தால்தான் நான் தங்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டி

னேன். இளைஞனை தங்கள் உள்ளம் இளவரசியின் அழகில் சபலம் ஏற்பட வைத்தது. தவறு தங்கள் மீதலல இயற்கையின் பாற்பட்ட கோளாறு உதயவர் மனை கண்டித்து வையுங்கள்''

''கண்டிப்பது மட்டுமெல்ல தண்டிப்பதும் என்கடமை. யாரங்கே?'' என்று குரல் கொடுத்தான்.

வாயில் காவலன் வந்து வணங்கி நின்றான் "உதய வர்மனை நான் அழைப்பதாகச் சொல்லி அழைத்து வாருங்கள்'' என்றான்

''மன்னிக்க வேண்டும்'' என்றான் காவலன்.

"என்ன?'' என்றான் சேனாதிபதி.

''சில நாழிகைக்கு முன்பு இங்கேயிருந்து தானே உதயவர்மன் அவசர அவசரமாகப் புறப்பட்டுச் சென் றார்'' என்றான் காவலன் ''என்ன? என்று வியப்புடன் கேட்ட சேனாதிபதி நிலமையை உணர்ந்து கொண்டான். அவன் முகம் சிவந்து காணப்பட்டது. ''என்னை அவ் வளவு மடையனாக நினைத்து விட்டானா? உதயவர்மன் எங்கிருந்தாலும் விலங்கு பூட்டி இழுத்து வாருங்கள்'' என்று கட்டளையிட்டான் சேனாதிபதி.

''அப்படியே'' செய்கிறோம் என்று புறப்பட்ட வீரனை மந்திரியார் சைகை செய்து தடுத்து நிறுத்தினார்.

"சேனாதிபதி உங்களால் அவனை பிடிக்க முடியாது முயற்சியை கைவிடுங்கள். இந்தவிடயம் வெளியில் தெரி யாமல் இருப்பதே நல்லது'' என்றார் மாளவர்மர் ஏன் என்று? கேட்பது போல அவரை விழித்துப் பார்த்தான் சேனாதிபதி.

''புரியவில்லையா சேனாதிபதி! அவன் இங்கே நாம் கதைத்ததை கேட்டிருப்பான். தன் கபட நாடகம் வெளிப்பட்டு விட்டதால் இனி இங்கிருப்பது உசிதமல்ல என்று கௌதமனைப் பின் தொடர ஓடியிருப்பான். கௌ தமனே அவனைச் சிறைப் பிடித்து வருவான். நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்று ஆறுதலளித்தார். மாளவர் மர்.

மூன்று வாரங்கள் காடுகளிலும் மலையிலும் பிரயாணம் செய்த கௌதமனும், வாமனனும் மந்தாகினி நதிக்கரையை ஓர் மாலைப்பொழுது சென்றடைந்தனர். மந்தாகினியின் நீர் புது வெள்ளமாகப் பாய்ந்து கொண்டிருந்தது. இருமருங்கும் அடர்ந்த காடுகளும் மலைச்சரிவும் நதியின் அழகை மேம்படுத்திக் காட்டின. நீர் மட்டத்தின் அருகே சிறு சிறு பாறைகளும், ஆற்று மணல் படுக்கையும் மந்தாகினியின் அழகுக்கு மெருகூட்டின. ஆற்றங் கரையையொட்டிய மேட்டுப்பகுதியிலுள்ள ஒற்றையடிப் பாதையில் மலை முகட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது கௌதமனின் புரவி அவனைப்பின் தொடர்ந்தான் வாமனன்.

சிறிது தொலைவு தான் சென்றிருப்பார்கள்'' பிரபு'' என்று கௌதமனை அழைத்தான் வாமனன் புரவியை நிறுத்தி பின்னே திரும்பிப் பார்த்தான் கௌதமன். ''அங்கே பார்த்தீர்களா?'' என்று ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினன் வாமனன் அந்த இடத்தைப் பார்த்ததும் கௌதமன் புன் சிரிப்புடன் புரவியை விட்டிறங்கினன்.

ஒரு கற் பாறையின் இடுக்கில் ஓர் மண்டையோடு காணப்பட்டது அதன் அருகே மேல் நோக்கி ஓர் எலும்பு அம்புக்குறி போல நாட்டப்பட்டிருந்தது. மடியில் செருகப் பட்டிருந்த ஏட்டுச் சுவடியை எடுத்துப் பார்த்தான் கௌதமன். சிரித்துக்கொண்டே அவற்றை தூக்கி ஆற்றில் வீசிவிட்டு புரவியில் ஏறி அமர்ந்து அதனை தட்டி விட்டான் எஜமானின் குறிப்பறிந்து விரைந்து நடந்தது புரவி. அவன் செய்கையைப் பார்த்து வியப்படைந்தவனுய் பின் தொடர்ந்தான் வாமனன்.

மாலைச் சூரியன் மெல்ல மெல்ல மலை வாயிலில் விழுந்துகொண்டிருந்தான். இருள் கவிய ஆரம்பித்தது இரவு தங்குவதற்கு வாய்ப்பான இடம் எங்கே கிடைக்குமென அலைபாய்ந்தன கௌதமனின் விழிகள். சிறு தொலைவுக்கப்பால் மரஞ்செடிகளற்ற மொட்டை பாறை

ஒன்று தென்பட்டது, அங்கே புரவியை செலுத்தி அவ்விடத்தை அராய்ந்த பின்பு அங்கே தங்குவது என்று தீர்மானித்தான். அவன் புரவியிலிருந்து இறங்கியதும் பொருட்களை அவிழ்த்து இறக்கி விட்டு குதிரைகளை தட்டி விட்டான் வாமனன். தங்கள் பிராயாணததில் ஓய்வு கிட்டிய மகிழ்ச்சியில் நிளைத்து விட்டு புல் மேய விரைந்தன புரவிகள்.

தீப் பந்தத்தின் வெளிச்சத்தில் இரவு உணவை முடித்துக் கொண்டு பாறை மீது எதிரும் புதிருமாக படுக்கையைப் போட்டுக் கொண்டனர்

"பிரபு இந்தக் காட்டில் மிருகங்கள் எதையும் காணோம் இரவுக்கு " என்றான் வாமனன்.

"மிருகங்கள் வரமாட்டா ஆனால்....." என்று மேலே கூறாமல் நிறுத்தினான் கௌதமன்.

"ஏன் நிறுத்தி விட்டீர்கள்? நாகர்கள் யாரும் வரலாம் என்று எதிர் பார்க்கின்றீர்கள் அப்படித் தானே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் வாமனன்.

"அப்படியுமிருக்கலாம் நாங்கள் இதுவரை பிரச்சனைகளை சந்திக்கவில்லை இப்போ பயங்கரங்களைச் சந்திக்க கூடிய நெருக்கத்திலிருக்கின்றோம். ஆனால் ஆற்றுக்கு இப்பால் நாகர்கள் வரமாட்டார்கள் என்றுதான் நினைக்கின்றேன். ஆகவே நீ காவலிருக்க வேண்டியதில்லை. நன்றாகத் தூங்கலாம் ஏதம் நெருக்கடி வந்தால் புரவிகள் ஓடி வந்து நமக்கு எச்சரிக்கை செய்யும் என்றான்.

"பிரபு எனக்கு ஒரு சந்தேகம்" என்றான் வாமனன்

"மண்டை ஓட்டைப் பற்றித் தானே?"

"ஆமாம்"

"இராவணன் கோட்டைக்குப் போகும் வழியை அறிவிக்கும் ஓர் மர்ம அறிவிப்பு. இது போன்று மேலும் சில அறிவிப்புக்களையும், அதிசயங்களையும் வழியில் சந்திக்கலாம். இவ்வளவு விரைவில் இதனை சந்திப்பேன்

என்று நான் முதலில் நினைக்கவில்லை "வாமனு " என்று அழைத்தவன் சில விநாடிநேரம் எதையோ சிந்தித்து விட்டு "நான் மாளவ நாட்டில் குருகுல வாசம் செய்கையில் குருநாதர் மந்திரவாதி மகாதத்தன் பற்றி ஓர் கதை கூறினர். மாளவ நாட்டின் ராஜ குருவாக இருந்த மகாதத்தன் மாளவ மன்னனை தந்திரமாக கொன்று சென்று விட்டதாகவும் வாரிசு இல்லாததால் மாளவ நாட்டில் மக்கள் கலகம் செய்யவே கௌதமரா ஜா படை எடுத்துச் சென்று கலகக்காரர்களை அடக்கி மாளவத்தை கௌதமபுரியுடன் இணைத்த பின்பே அமைதியுடன் மாளவம் விளங்குவதாகவும் கூறினர்

"மாளவம் தங்கள் தாயாதிகளின் நாடாயிற்றே"

ஆமாம் குருநாதர் கூறியவற்றில் இருந்து மந்திரி மகாதத்தன் பெரும் தந்திரசாலி அவனுக்கும் இராவணன் கோட்டைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கவேண்டும் என நினைக்கின்றேன் நான் இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டதன் காரணம் இப்போது உனக்குப் புரியும் என்று நினைக்கின்றேன் "என கௌதமன் கூறிக் கொண்டிருக்கும் போது மந்தாகினி ஆற்றின் அலை ஓசையை மீறிய பயங்கரமான ஓர் ஒலி அந்தப் பிராந்தியத்தை கலங்கடித்தது.

## 7

அன்றிரவு அதிகநேரம் தூக்கமின்றி கழித்ததால் கதிரவன் உதயத்தின் பின்பே துயில்நீங்கி எழுந்தனர் கௌதமனும் வாமன்னும் காலைக்கடன் முடித்துக் கொண்டு பிரயாணத்திற்கு ஆயத்தமாகினர்.

மந்தாகினி ஆறு சூரியஒளிபட்டு புதுமணப்பெண் போலபொலிவுடன் விளங்கியது. முதல் நாளிரவு அந்த ஆற்றில் கேட்ட பயங்கரஒலிக்குரிய உருவத்தின் அறிகுறி எங்குமே தென்படவில்லை.

''பிரபு அந்த மிருகம்.....'' என்று வாமனன் வார்த்தை முடிக்காமல் இழுத்துக்கொண்டே அவனை அணுகினன்.

''இது ஏதோ ஒருவகை மிருகம். யானையைப் போல உடம்பும், துதிக்கையும், முதலை போன்று வாலும் பார்ப்பதற்கே பயங்கரமாக விளங்குகின்றது இதனல்தான் இந்தக்காட்டுப் பகுதியில் வேறுவிலங்கினங்களைக் காண முடியவில்லை நாகர்கள் ஆற்றின் அப்பகுதியில்தான் இருக்க வேண்டும்'' என்று கூறிக்கொண்டே குதிரையை விரைவாகச் செலுத்தினன்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவேறு ஒருஇடத்தில் இரண்டு மண்டைஒடுகள் வைக்கப்பட்டிருந்தன. அதற்கு அப்பால் சிறுதொலைவு சென்றதும் இன்னேர் இடத்தில் மூன்று மண்டைஓடுகள் வைக்கப் பட்டிருந்தன. அந்தஇடத்தில்வைக்கப் பட்டிருந்த அடையாளங்களை பார்த்து சிரித்துக்கொண்டே சுவடியை எடுத்துப்பிரித்தான் கௌதமன்.

''வாமனு இனி நாம் வந்த வழியேதான் திரும்பவேண்டும் இதற்கு மேல்நாம் செல்ல முடியாது''

''ஏன் பிரபு?''

''ஆற்றைக்கடக்கும் பாதையை யாரும் அறிந்து கொள்ள முடியாதபடி இப்படி ஏமாற்றுவதற்காகவே தான் சுவடியில் இவைகள் காட்டப்பட்டிருக்கின்றன. இரவு எமக்கு ஏற்பட்டபயங்கர அனுபவம் ஒன்றுக்கு நன்மையாகவும் இருக்கிறது. அந்த பகவதி அம்பாளே வழி காட்டும்பொருட்டு பயங்கரமிருகத்தினைக் கொண்டே ஆற்றினைகடக்கும் பாதையை காண்பித்திருக்க வேண்டும். இல்லை எனில் மந்தாகினியின் நீர் பிரவாகத்தில் ஆற்றுப் பாதையை நாம் கண்டுபிடிக்க முடியாது போயிருக்கும்.''

இருவரும்திரும்பவும் புறப்பட்ட இடத்திற்கு திரும்பி வந்தனர். சிறிது இளைப்பாறிவிட்டு ஆற்றங் கரைக்குச் சென்று முதல்நாளிரவு அந்தப்பிராணி சென்றகால் தடங்களை ஆராய்ந்துகொண்டே ஆற்றில் இறங்கினர் மேலே ஆற்றுநீர்பிரவாகமாக தெரிந்தபோதும் பாலம் போன்று

அந்தப்பாதை சீராகவே சென்று கொண்டிருந்தது. சில இடங்களில் கடக்கக்கூடிய அளவுக்கு ஆழமாக கால்வாய் போலிருந்தபோதும் தொடர்ந்து அக்கரை சென்றடைந் தனர்

கதிரவன் உச்சிக்கு வந்துவிட்டான்.இருவரும் களைப்பு தீரநதியில் நீராடிவிட்டு மதியஉணவு உட்கொண்டனர்.

“வாமனு! இரவு சென்றபயங்கர விலங்கின் அடிச் சுவட்டைப் பின்பற்றி நாம் பிரயாணத்தை மேற்கொள் வோம். நிட்சயமாக அந்தப்பிராணி நாகர்களின் இருப் பிடம் நோக்கியே சென்றிருக்க வேண்டும். பகவதி அம் மன் அருள்தான் அந்தவிலங்கு இங்கே வரகாரணமாயி ருக்க வேண்டும் நாகர்களுக்கு உதவுவதன் மூலம் அவர் கள் உதவியினுல் இரவாணன் கோட்டையை சுலபமாக நாம் கண்டுபிடித்து விடலாம்'' என்று கூறிக்கொண்டே பிரயாணத்தை ஆரம்பித்தனர்.

அடர்த்தியான மரஞ்செடிகளைக்கொண்ட காட்டின் ஊடே ஓர்ஒற்றையடிப்பாதையில் அந்தவிலங்கு சென்ற அடையாளம் துல்லியமாகத்தெரிந்தது. அதனைத்தொட ர்ந்துசென்ற கௌதமனும் வாமனனும் சிறிது தொலைவு தான் சென்றிருப்பார்கள் அந்தவிலங்கின் பயங்கரஒலி காடே அதிரும்படி கேட்டது. இடைக்கிடையே சத்தம் ஓய்ந்த போதும் தொடர்ந்து அந்தஒலிகேட்டுக் கொண் டேயிருந்தது. புரவியை விரைந்து செலுத்திய கௌதமன் புரவியின் சேணத்துடன் கட்டப்பட்டிருந்த ஈட்டிஒன்றை உருவிஎடுத்துக்கொண்டான் ஒருமாபெரும் பயங்கரத்தை சந்திப்பதற்கு ஆயத்தமாகும் எஜமானனைப் பின்பற்றி தானும் ஆயத்தமானுன் வாமனன்.

அடுத்த சிலவினாடியில் அவர்கள் கண்டகாட்சி உதி ரத்தைஉறைய வைப்பதாயிருந்தது. விசித்திரமான அந்த விலங்கு நாகர்களின் குடியிருப்புப்பகுதியை துவசம்செய்து கொண்டிருந்தது சிலநாகர்களைகொன்று போட்டுவிட்டு அட்டகாசக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தது. பலர்குய்

யோமுய்யோ என்றுகத்தியவாறு ஓடிக்கொண்டிருந்தனர் வேறுசிலர் மரங்களில் ஏறிஇருந்துவேல்களை வீசிக்கொண்டிருந்தனர் அந்தவிலங்கின் உடலில்வேல்கள் பட்டுதெறித்து விழுந்தன. பலமான வாலைநிலத்தில் சுழற்றிஅடித்து பலமாக ஒலி எழுப்பி யானையின் துதிக்கை போன்ற தலையினுல் ஆட்களை கவ்விஇழுத்துகடித்துப்போட்டது. நாகர்களின் குடில்கள் பிய்த்து வீசப்பட்டிருந்தன. சிலவிநாடிப் பொழுதுதான் நிலமையை அவதானித்த கௌதமன்'' வாமனு நீ என்னைபின்தொடர்ந்து வந்து அதன் பின்புறம் நின்று கொள். கயிற்று வளையத்தை சுருக்கிட்டு சந்தர்ப்பம் அறிந்து கழுத்துக்கு வீசி குதிரைச்சேணத்துடன் இணைத்துக்கொள் நான் முன்னே போகின்றேன்'' என்று கூறி விட்டு புரவியுடன் விரைந்தான்.

புரவியில் வரும் ஆளைப்பார்த்து நாகர்கள் குரல் எழுப்பினர் அவர்களின் ஆரவாரத்துக்கிடையே தனக்கு நேர் எதிரில் புரவியில் இருப்பவனைப்பார்த்த அந்த விநோத மிருகம் ஆக்ரோசமாக வாலைநிலத்தில் ஓங்கி அறைந்தது தலையைமுன்பக்கமாக நீட்டிநகரமுனைந்தது. அதேசமயம் கௌதமனுடைய கரம்தலையின் பின்புறம் சென்றது. கண்இமைக்கும் நேரத்தில் அந்தவிலங்கின் இரு கண்களினின்றும் குருதி கொப்பளித்துப்பாய்ந்தது. அடுத்தவிநாடி வாமனனின் சுருக்கு கயிறு அதன்கழுத்தில் வசமாகஇறங்கி இறுக்கியது. வாலைநிலத்திலடித்து தறிகெட்டு திமிறியவிலங்கை நோக்கி தன் ஈட்டியை வீசினுன் கௌதமன். அது குறிதவறுது அதன் கழுத்தின் மென்மையான பாகத்தில் சதக்கெனப்புகுந்து கொண்டது. விநாடிக்கு விநாடி அந்தவிலங்கின் பலமான கூச்சல் சுருதி குறைந்து ஒலிக்கவே நாகர்கள் மகிழ்ச்சியாரவாரம்செய்தனர். வலுவிழந்து கொண்டிருக்கும் அந்த விலங்கின் மீது மீண்டும் ஓர் ஈட்டியைப்பாய்ச்சினுன் கௌதமன். அதனை முன்னே நகரவிடாது வாமனனின் சுருக்குக் கயிறுஇழுத்துக் கொண்டிருந்தது. அடுத்த சில விநாடிகளில் தலையைத் தொங்கப்போட்டபடி சரிந்துவிழுந்தது அந்தபயங்கர ராட்சதமிருகம் புரவியினின்றும் குதித்த வாமனன் விரைந்து

அதன்சமீபமாகச் சென்ருன். கையில் அவன்வாள் தயாரான நிலையிலிருந்தது. மிருகம் முற்ருக இறக்காத நிலையில் மூச்சு 'ஸ் ஸ் ஸ்' என்று இழுத்தபடி கிடந்தது. அருகில் சென்ற கௌதமன் அதன் இருவிழிகளிலும் பாய்ந்திருந்ததன் நவீன ஆயுதத்தைபிடுங்கி எடுத்துத் துடைத்து கழுத்துப்பகுதியில் செருகிக் கொண்டான். பயந்தோடிய நாகர்கள் கூட்டமாக குழுமிநின்று வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்தனர்.

நாகர்களின் தலைவனும் பூசாரியுமான நாகதேவன் தன் உயர்ந்த குடிலிலிருந்து வெளியே வந்து தன் மக்களோடு ஒன்று சேர்ந்து கொண்டான். அவர்கள் முன்னேறி வருவதைப் பார்த்த கௌதமன் ''பயப்படாதீர்கள் அது இறந்துவிட்டது. உங்கள் நாகதேவதை என்னை இங்கு அனுப்பி வைத்தது' என்று அவர்கள் பாஷையில் கூறியதும் எல்லோரும் முழங்காலில் மண்டியிட்டு உட்கார்ந்து அவனுக்கு தமது நன்றியை தெரிவித்து மகிழ்ந்தனர்' அடுத்த கணம் நாகர் தலைவனின் குரல் கம்பீரமாக ஒலித்தது.

''கடவுளின் தூதராக வந்த தாங்கள் யார்?

''கௌதமன் பகவதி தேவதையின் சீடன் நாகர் குலத்தை பூண்டோடு ஒழிக்க வந்த இந்த அரக்கனை கொல்லும்படி தேவிபகவதி பணித்தாள்'' என்று அவன் கூறிய பதிலால் நாகர்கள் மந்திரசக்திக்கு கட்டுண்ட நாகங்கள்போல மயங்கினர். மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

''வாமனு இங்கே வா'' என்று வேறுமொழியில் அவன் வாமனனை அழைத்தும், தங்கள்மொழியை அவன் தடையீன்றி பேசுவதையும் கேட்ட நாகர்கள் அவன் ஓர்தேவதூதன் என்றே முற்ருக நம்பினர். அவனையும் அழைத்துச்சென்று தங்கள் குல தெய்வமான நாகதம்பிரான் முன்னிலையில் அமரச்செய்து பழங்கள், தேன் முதலியன கொடுத்து உபசரித்தனர். அதே வேளையில்சில

நாகர்கள் ஒருவனைத்தூக்கி வந்தனர். அவனுடைய மார் பில் காயம் பட்டிருந்தது. அதிலிருந்து குருதி வழிந்து கொண்டிருந்தது. அவன் தான் அவர்களுடைய தலைவனுக்கு அடுத்த இடத்தை வகிப்பவன் என்றும் ஆரம்பத்தில் விலங்குடன் மோதச்சென்று காயம் பட்டு தூக்கி வீசப்பட்டு குற்றுயிரில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தான்.

''இவனுக்கு நான் சிகிச்சை அளிக்கலாமா? என நாகர்தலைவனைக் கேட்டான் கௌதமன்.

''கடவுளின் தூதரே! உங்கள் விருப்பத்திற்கு எமது இனத்தவர்கள் ஏதும் மறுப்புக் கூறமாட்டார்கள். தாங்கள் கட்டளை இட்டால் சிரம்தாழ்த்தி எதையும் செய்வோம் இறந்து கொண்டிருக்கும் இவனை காப்பாற்றினுல் நாகர் குலமே உங்கள் அடிமை'' என்று கண்ணீர் மல்க கூறினுன்.

அவனுடைய மார்பிலிருந்த குருதியைத் துடைத்து விட்டுதன் கச்சையிலிருந்த சுவர்ணகாந்தி இலையைஎடுத்து அந்தக்காயத்தின் மீது வைத்தான். விநாடிகள் நகர்ந்து கொண்டிருந்தன. மரணத்துடன் போராடிய அந்தநாகர் தலைவன் துயில் நீங்கி எழுந்தவன் போல கண்களைத்திறந்து பார்த்தான். மருள மருள விழித்தான். தன் மார்பில் கைவைத்திருக்கும் புதியமனிதனைப் பார்த்ததும் முதலில் பயந்தானுயினும், தன் இனத்தவர்கள் எல்லாம் அமைதி காய இருப்பதை பார்த்து பயம் நீங்கியவனுய் எழுந்தான். கௌதமன் காயத்தின்மேல்வைத்த இலையை எடுத்தான். அவன் மார்பில் காயம் பட்ட அடையாளமே தெரியாமல் முன்பு போல் அவ்விடம் காட்சியளித்தது. அதே சமயம் யாரும் எதிர்பாராத ஓர் நிகழ்ச்சி அங்கே நடந்தது. நாகர்கள் எல்லோரும் அதனை கண்டு நிலத்தில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து படுத்தனர்.

# 8

கௌதமன் தன்னுடைய செயல்களால் நாகர்களின் பூரணமான நம்பிக்கைக்குப் பாத்திரமாகி விட்டதைக் கணப்பொழுதில் உணர்ந்து கொண்டான் நாகர்கள் தலைவன் நாகதேவன் தன் பாதங்களைப் பற்றியவாறு மண்டியிட்டு உட்கார்ந்ததும். நாகர்கள் நெடுஞ்சாண் இடையாக வீழ்ந்து வணங்கியதும் அவற்றை அவனுக்கு உணர்த்தின,

''நாகர்கள் தங்களுக்கு அடிமைகள் என்று நாகதேவன் கூறிய வார்த்தைகளை கேட்டதும் நாகதேவனை தூக்கி தன் மார்புடன் தழுவியவாறே கௌதமன் கூறினான்

''நாகதேவா! யாருக்கும் யாரும் அடிமையில்லை இனத்தால் நாம் வேறுபட்டாலும் மனிதர்கள் தான் நீங்கள் என் நண்பர்கள்''

''என்னதானிருந்தாலும் நீங்கள் அபூர்வ மனிதன் கடவுளின் தூதன் இறக்கப்போனவனை உயிர் பெறச் செய்துள்ளீர்கள் காயத்தின் வடுக்கூடத்தெரியாத அற்புத மூலிகையை வைத்திருக்கின்றீர்கள்'' என்று கூறினான்.

''நாகதேவா! நீங்கள் எனக்கு உதவி செய்தால் இது போன்ற அற்புத மூலிகையை உங்களுக்கு நிறையத் தருவேன். அதுமட்டுமல்ல எங்கள் பகவதிதேவியின் அபூர்வ சக்தியுள்ள வாளைத் திருடி வந்த மந்திரவாதி மகாதத்தனையும் கொன்று தேவியின் குறையைத் தீர்ப்பேன். தேவியின் கட்டளையை நான் நிறைவேற்றும் வரை எனக்கு ஓய்வு இல்லை என்றான்

''நீங்கள் குறிப்பிடும் மந்திரவாதி இறந்துவிட்டான் என்றான் நாகதேவன்.

''என்ன மகாதத்தன் இறந்துவிட்டானா?'' என்று ஆச்சரியப்பட்டவனாய் வினவினான் கௌதமன்.

''அது ஒரு கதை வாருங்கள் நீங்கள் தேடிவந்த வாள் கூட எங்களிடம் பத்திரமாகவிருக்கின்றது. அது வந்தவேளையிலிருந்து நாங்கள் பல்வேறு இன்னல்களையும் அனுபவித்து வருகின்றோம்'' என்று அவனைத் தன் குடிலுக்குள் அழைத்துச் சென்றான்.

இரவு வந்து நிலவும் வந்தது. வெளியே நாகர்களின் ஆரவாரம், இறந்த மிருகத்தை வெட்டி துண்டுபோட்டு நெருப்பில் வாட்டிப் பதப்படுத்தி களிகொண்டாடினர் நாகர்தலைவன் தன்னிடமிருந்த வாளை கௌதமனிடம் ஒப்படைத்துவிட்டு அவனை வணங்கினான்.

இரத்தினங்கள் பதிக்கப்பட்ட கைபிடியுடன் காட்சியளித்த அந்த வாளை பார்த்து பிரமித்தான் கௌதமன் அபூர்வசக்தி படைத்த அந்த வாளைப் பற்றி ஏட்டில் குறிப்பிடப்படவில்லை மாளவ நாட்டின் குரு தேவர்கூறிய கதைகளை கேட்டறிந்திருந்தான் இரு விழிகளும் வியப்பால் விரிய வாளை விழிகளுடன் ஒத்தி வணங்கியவன்'' ஜெய பகவதி'' என்று வாளை உயர்த்திப் பிடித்தவன் ''நாகதேவா' இந்த வாளை பத்திரமாகப் பாதுகாத்த நாகதேவதையை வழிபட்டு ஆசி பெற விரும்புகின்றேன்'' என்றான்.

வாருங்கள் வாருங்கள்'' என்று அகமும் முகமும் மலர அவனை வெளியே அழைத்து வந்தவன் வெளியே இருந்த ஓர் முரசினை மூன்று முறை தட்டினான்.

அடுத்த விநாடி நாகர்கள் கூட்டம் நாகதேவதையின் கோயிலை நோக்கி நகர்ந்தது. தீப் பந்தங்கள் நிலவொளியுடன் போட்டியிட்டுப் பிரகாசிக்க ஆட்டம்' பாட்டுடன் நாகர்கள் கௌதமனை நாகதேவதையின் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். நாகதேவதையின் கோயில் பார்ப்பதற்கு பயங்கரமானதாக விளங்கியது தீப்பந்தங்களை ஆங்காங்கே செருகிவைத்து விட்டு எல்லோரும் கூடி ஆடினர். கௌதமன் தன் அபூர்வ வாளை உயரத் தூக்கிப் பிடித்தவாறே நாகதேவதையை வணங்கி

வலம் வந்தான்.

நாகதேவனும் நாகதேவதையை வணங்கி ஓர் தாயத்தை அவன் கழுத்தில் கட்டி ஆசீர்வதித்தான்

நாகதேவா! உங்கள் அன்பாலும் ஆசியாலும் நான் மகிழ்ந்திருக்கின்றேன். மந்திரவாதி மசாதத்தனை பற்றியும் அவன் வாழ்ந்த இராவணன் கோட்டை பற்றியும் நான் தெரிந்து கொண்டே இவ்விடம் வந்தேன் மகாதத்தனை நீராடும் போது உனது வீரர்கள் அவனைத் தந்திரமாகக் கொன்றமைக்காக நான் பராட்டுகின்றேன். இராவணன் கோட்டையைப் பற்றி தாங்கள் அறிந்ததுண்டா?' என்று கேட்டான்.

கௌதமரே! அந்த மந்திரவாதியைத்தான் எமக்குத் தெரியுமே தவிர தாங்கள் கூறும் கோட்டையைப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது'' என்றான்.

''நன்றி; உன் வீரர்கள் சிலரை என்னுடன் அனுப்பி வைக்கமுடியுமா? இந்த உதவியை நீங்கள் செய்தால் என்னாலான உதவிகளை உங்கள் இனத்தவருக்குச் செய்ய நான் தயங்கமாட்டேன்,, என்றான்.

நாகதேவன் தன் கூட்டத்தினரை சுற்றவரப்பார்த்தான். அவர்கள் தலைவன் என்ன கூறப்போகிறான் என அவனையே பார்த்து நின்றனர்.

எங்களைக் காப்பாற்றிய கடவுளின் தூதுவர் எங்கள் உதவியை எதிர்பார்க்கிறார். உங்கள் முடிவு என்ன? என்று நாகதேவன் கேட்டான்.

''தலைவா நான் செல்கின்றேன்'' என்று முன்வந்தான் அன்று மாலையில் கௌதமனால் காப்பாற்றப்பட்ட நாகன் அவனைத் தொடர்ந்து பத்து இளைஞர்கள் அவ

னுடன் சேர்ந்து கொண்டனர் புன்சிரிப்புடன் கௌத மனை நாகதேவன் பார்த்தான்.

''நன்றி நாகதேவா! உங்கள் அன்புக்கு என் நன்றிக் காணிக்கை'' என்று கூறி தன் கழுத்திலிருந்த ஓர் முத்து மாலையை கழற்றி நாகதேவன் கழுத்தில் அணி வித்தான். நாகர்கள் மகிழ்சியாரவாரம் செய்தனர்.

''நண்பர்களே! நான் கடவுளின் தூதுவன் என்று உங்கள் தலைவன் கூறினார். நான் கௌதமபுரியின் இள வரசன். நானும் உங்களைப் போன்ற இளைஞன் தான்'' என்று கூறி தன் வேடத்தை கலைத்தான்.

அவனுடைய இளமையும் அழகும் நாகர்களைப் பிர மிப்பிலாழ்த்தியது. அவனுடைய தோற்றம் அவர்களைக் கவர்ந்தது இளைஞனை அவனுடைய வீரச்செயல்களும், அபூர்வ சக்திகளும் அவனை ஓர் தேவ தூதனாகவே நம்பச் செய்தது. நாக இளைஞர்கள் அவனைத் தூக்கி தோளில் வைத்து சுழன்று சுழன்று ஆடினார்கள். அன்றைய இரவு மகிழ்ச்சியாகவும் விரைந்தும் கரைந்தது.

காலை விடிந்தது முதல் ஏட்டுக் கட்டையே பார்த் துக் கொண்டிருந்தான் கௌதமன். அவனுடைய ஒவ் வொரு செயலையும் உற்றுக் கவனித்து வந்த வாமனன் அப்படி ஒருவனுக்கு உதவியாளனாயிருப்பதை எண்ணிப் பெருமையுற்றான்.

''இளவரசே''

''என்ன'' என்று சிரித்துக் கொண்டே திரும்பினான் கௌதமன்.

''நாகர்கள் உங்களை தேவதூதனாகவே நம்பி விட்

டார்கள். அதை நினைத்துத்தான் ...''

வாமனு! இந்த வாள் பற்றி என் என் குருநாதர் கூறியிருக்கின்ருர். உண்மையிலேயே இது அபூர்வ சக்தியுள்ள வாள் இதை வைத்துததான் மகாதத்தன் தன் திருவிளையாடல்களை நடாத்தியுள்ளான். எங்கள் குல தெய்வம் பகவதியே இப்படி ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்ருள். அந்த ராட்சத மிருகம் வந்திருக்காவிட்டால் நாகர்களை வேறு வழியில் பணிய வைத்திருக்கலாம். ஆனுல் சுலபமாக எமது வேலைமுடிந்து விட்டது. பகவதியின் கருணையே கருணை'' என்ருன்.

''உதயவர்மன் எங்களைப் பின் தொடர்ந்திருப்பானு?''

''வந்திருந்தாலும் மந்தாகினியைத் தாண்டியிருக்க முடியாது. அந்தப் புருவை எடுத்து வா. இன்று ஓர் செய்தியை மாளவர்மருக்கு அனுப்பி வைப்போம்'' என்ருன்.

புரு மூலம் செய்தி அனுப்பி விட்டு வந்த கௌதமன் நாகர்களால் கொடுக்கப்பட்ட வாளை எடுத்து அதன் கைப்பிடியை ஆராய்ந்தான். நவரத்தின கற்கள் பதிக்கப்பட்ட அதன் பிடியின் நடுவே ஓர் அபூர்வமான மாணிக்கக்கல் பதிக்கப்பட்டிருந்தது.

''வாமனு''

''இளவரசே'' என்று அவன் அருகில் வந்தான்.

'' இந்தக் கல்லைப் பார்த்தியா? ஒன்பது பட்டங்கள் வெட்டப்பட்ட முகப்பு. ஒவ்வொரு பட்டத்தினின்றும் ஓவ்வொரு விதமான ஒளி தெரிகின்றது எந்த ஓர் அமானுஷ்ய சக்தியையும் இந்தக் கல்லின் துணை

கொண்டு அடக்கி விடலாம். தெய்வீக சக்தி வாய்ந்த இந்தக் கல்லை வாளில் வைத்திருந்ததால் இதையே தனது ஆயுதமாக்கி மகாதத்தன் எல்லோரையும் அடக்கியாண்டு வந்திருக்கின்றான். நீராடும் பொழுது கரையில் வைத்து விட்டு நதியில் இறங்கியிருக்கின்றான் நாகர்கள் புத்திசாதுரியமாக அவனை வீழ்த்தி விட்டார்கள். எமக்கு ஓர் வேலை சுலபமாகி விட்டது''

''இளவரசே! மகாதத்தனுக்கும் இராவணன் கோட்டைக்கும் சம்பந்தம் இருக்கும் என நினைக்கின்றீர்களா?''

''நிட்சயமாக நான் நம்புகின்றேன். ஏன் சந்தேகப்படுகின்றாய்?''

''அப்படித் தொடர்பிருந்தால் மகாதத்தன் மரணத்தின் பின் அவன் இருப்பிடத்தை நாகர்கள் கண்டறிந்திருப்பார்களே என்றான்.

''உண்மைதான் வாமனா! ஆனால் இராவணன் கோட்டை இவர்கள் பார்வைக்கு அப்பால் வெகு தொலைவில் இருக்கவேண்டும். மகாதத்தன் போக்குவரத்தில் தான் இவர்களிடம் மாட்டிக் கொண்டிருக்க வேண்டும் சர்வவல்லமை படைத்த மகாதத்தனை இவர்கள் சூழ்ச்சியாகவேதான் வென்றிருக்கின்றார்கள் என்ன இருந்தாலும் நாகர்கள் எமக்கு பெரும் உதவி ஒன்றைச் செய்துள்ளார்கள். அதுதான் இந்தவாள். அவர்கள் எமக்கு எதிராக ஓர் துரும்பு அசைவதைக் கூட எதிர்ப்பார்கள்'' என்று கூறிக் கொண்டிருக்கும் போது வெளியே நாகர்கள் பெரும் ஆரவாரம் செய்வது கேட்டது.

'கௌதமபுரி இளவரசரான தேவதூதரை அழைத்து வாருங்கள்'' என்று நாகதேவன் கூறிய வார்த்தைகளும் அவனுக்கு தெளிவாகக் கேட்டன.

அவசரமாக எழுந்து வெளியே வந்தான் கௌதமன் அவனைப் பின் தொடர்ந்து வாமனனும் வந்தான். நாகர்கள் அவனைப் பார்த்ததும் வணங்கி நின்றனர். ஆனல் கௌதமன் விழிகளில் வியப்பும் ஆச்சரியமும் தென்பட்டன . எது நடக்காது என்று நினைத்தானே அது நடந்து விட்டிருந்தது.

## 9

கௌதமனின் இதழ்களில் புன்னகை மலர்ந்ததைக் கண்ட நாகர்கள் ஆரவாரம் செய்தனர். கைகள் பிணைக்கப்பட்டு ஆயுதங்கள் களையப்பெற்ற நிலையில் முழங் காலில் மண்டியிட்டு நின்றிருந்த உதயவர்மனையும் அவன் வீரர்களையும் பரிதாபமாகப் பார்த்தான்.

"இவர்களை உங்களுக்குத் தெரியுமா?'' என்று நாக தேவன் கௌதமனைப் பணிவுடன் வினவினன்.

"ஆமாம் இவர்கள் ஜனநாதமங்கலத்து வீரர்கள் என்னைப் பின்தொடர்ந்து வந்த சூழ்ச்சிக்காரர்கள் இவன் பெயர் உதயவர்மன். அந்நாட்டின் உபதளபதி சதி செய்து என்னைக் கொலை செய்ய வந்த கொடியவன் என்று கூறியதும் நாகர்கள் தங்கள் வேல்களை உயர்த்தி அவர்களைக் குறி வைத்தனர்.

"இவர்களை நாகதேவதைக்குப் பலி கொடுத்தால் என்ன?'' என்று நாகதேவன் கேட்டான்

''நாகதேவா இவர்களை உங்கள் சிறையில் பலத்த

காவலில் வையுங்கள். இவர்கள் வந்த புரவிகள் எங்கே?' என்று கேட்டான் கௌதமன்.

"பிடித்து வந்திருக்கின்றோம் நதியின் அக்கரையில் வேவுபார்க்க நின்றவனை முதலில் பிடித்து எல்லோரையும் பிடித்து வந்தோம் என்றான் அவர்களை பிடித்து வந்த கூட்டத்தின் தலைவன்.

"நல்லது நண்பர்களே நாகதேவா உங்கள் பத்து வீரர்களுக்குப் பதிலாக இவர்களை காவலில் வையுங்கள். நான் திரும்ப வந்து உங்கள் வீரர்களை ஒப்படைத்ததும் இவர்களை என்னிடம் ஒப்படையுங்கள் இவர்கள் ராசதுரோகத்துக்கான தண்டனையை அவர்கள் மன்னர் மகீபரே வழங்கட்டும்"

"அப்படியே செய்கின்றோம்" என்றான் நாகதேன்.

இவர்கள் வந்த வேளையும் நல்லது இவர்கள் புரவிகளை நாங்கள் பயணத்திற்கு பயன்படுத்துவோம். என்னுடன் வர விரும்பிய இளம் நண்பர்களே இவர்கள் புரவிகளை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கௌதமன் கூறியதும் நாகதேவன் உட்பட நாகர்கள் அனைவரும் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர்.

உதயவர்மா! நான் பகைவனுடனும் நண்பனாக இருக்க விரும்புபவன். நீ ஒரு கோழை கடைந்தெடுத்த அயோக்கியன். நான் உனக்கு எதிரியில்லாத போதும் என்னை போட்டிக்களத்தில் கொல்ல முயன்றாய் அத்துடன் விட்டிருந்தால் பரவாயில்லை என்னை வேவுபார்த்தாய். இன்று நாகர்கள் என் நண்பர்களாய் இருக்கின்றார்கள் ஏன் தெரியுமா? அவர்கள் குலத்தை அழித்தொழிக்க வந்தராட்சத விலங்கைக் கொன்று அவர்களை காப்பாற்றினேன் உன்னையும் உன்னை நம்பிவந்தவர்களையும் நாகதேவதைக்கு பலி

கொடுக்க நாகதேவன் விரும்பினுன். நான் தடுத்து உங்களை கைதியாக வைத்திருக்கும்படி கூறியுள்ளேன். நான் ஆம் என்று தலையசைத்தால் உங்கள் தலைகள் உருளும் காட்சியை இக்கணமே காணலாம் நீ இனியாவது திருந்தி நல்லவனுய் நான் வரும் வரைக்கும் இருந்தால் உயிருடன் நாடு திரும்பலாம் இன்றேல் உன் விதியை நீயே தீர்மானித்துக் கொள் என்று கூறி நாகதேவனுக்கு அவர்கள் மொழியில் தான் கூறியவற்றையும் கூறினுன் கௌதமன்.

இவர்தான் உதயவர்மனு? என்று கேட்டான் நாகதேவன்

ஆமாம் இவனேதான்,,

''இவனை மிக கடுமையான காவலில் பாதுகாப்புடன் வையுங்கள்'' என்று கட்டளை இட்டான் நாகதேவன்.

பிரபு! எங்களை மன்னித்து தங்களோடு அழைத்துச் செல்லுங்கள் என்முன் உதயவர்மன்'

உதயவர்மா! நீ என்னைப் பின் தொடர்ந்த போதே எனக்கு எதிரி இனியும் உன்னை நம்பி மோசம் போக நான் முட்டாளல்ல என்னுடன் இந்த நாக இளைஞர்கள் வரப் போகின்ருர்கள் இவர்கள் என்மீது ஒரு துரும்போ, எறும்போ விழுந்தாலும் தங்கள் உயிர் கொடுத்து காக்கும் நம்பிக்கைக்குரியவர்கள் என்று நாகர்களின் மொழியில் கூறினுன் அந்த இளைஞர்களின் ஒருவன் தன்னுடைய விரல் நுனியை வேலின் முனையில் அமர்த்தி அதில் பீறிட்ட குருதியை கௌதமனின் நெற்றியில் நாக வடிவில் திலகமாகத் தீட்டி கௌதமன் தங்கள் உயிரை விட மேலானவர் என்று சபதம் செய்தான் அந்த இளைஞர்கள் கௌதமனின் முன் மண்டியிட்டு

முன்னவன் கூறிய வாக்கியத்தை உறுதி செய்தனர்

உதயவர்மன் இந்த மெய் சிலிர்க்கும் காட்சியை கண்டு கூனிக்குறுகினுன் தன்னுடைய சூழ்ச்சியும்' அவசர புத்தயும் எத்தனை பெரிய அவமானத்திலும்' ஆபத்திலும் சிக்கவைத்து விட்டது என நினைத்து வருந்தினுன்

அவனுடன் சேர்ந்து வந்தவர்களில் ஒருவன் எழுந்து கௌதமனின் காலடியில் வீழ்ந்தான். விக்கி விக்கி அழ வானுன்

''பிரபு எங்களுக்கும் இந்தச் சதிக்கும் சம்பந்தமில்லை தளபதியாரின் கட்டளைக்குட்பட்ட காவலர்கள் நாங்கள் இவர் எங்களை அழைத்து வந்தார் மற்றும்படி நாங்கள் எதுவும் அறியோம்,,என்ருன்

''பயப்படாதே உங்களுக்கு எதுவும் நேராது, நாக தேவா! இவர்கள் ஏதுமறியாத வீரர்கள் உதயவர்மன் கட்டளைக்கு பணிந்து வந்தவர்கள் இவர்களை நன்ருக கவனித்துக் கொள்வதே எனக்கு தாங்கள் செய்யும் உதவி இவர்களை விடுதலை செய்து உங்கள் நண்பர் களாக வைத்திருங்கள் உதயவர்மனை கவனமாக கண் காணியுங்கள்,, என்று கூறிவிட்டு தன் பிரயாணத்திற்கு ஆயத்தமாகச் சென்ருன்

,, உதயவர்மனை மட்டும் கைதியாக கொண்டு சென் றனர். நாகர்கள் மற்றவர்களை விடுதலைசெய்தனர்' அவர் கள் மகிழ்ச்சியுடன் கௌதமனுக்கு நன்றி தெரி வித்தனர்.

இராவணன் கோட்டைக்கு பிரயாணத்தை மேற்கொள் ளுமுன் நாகதேவதையைச் சென்று வணங்கினுன் கௌ

தமன் அந்தச் செயல் அவன் மீது நாகர்களுக்கு அளவுக்கு அதிகமான நம்பிக்கையையும், பயம் கலந்த பக்தியையும் கொள்ளச் செய்தது நாகதேவனும் அவன் மனைவி நாக ராணியும் மலர்க் கொடிகளை மாலையாக்கி அவனுக்குச் சூட்டினர்

''வெற்றியோடு திரும்பி வா மகனே 'என்று வாழ்த்தினர்.

அதுவரையில் தன்னைத் தேவதூதன் என்று கூறிக் கொண்டிருந்த நாகதேவன் மனைவியோடு வந்து தன்னை ஆசீர்வதித்து' 'மகனே' என்றதும் கௌதமனுடைய விழிகள் பனித்துவிட்டன. விழிகளை துடைத்து விட்டுக் கொண்டே அவர்கள் பாதங்களை தொட்டு வணங்கினான்

''என் தாயும் தந்தையுமாக என்னை ஆசிர்வதித்த உணர்வில் நான் என்னையே மறந்துவிட்டேன். உங்கள் ஆசீர்வாதம் எனக்கு மேலும் உற்சாகத்தையும் உறுதியையும் அளிக்கின்றது நீங்கள் அளித்த இந்த அபூர்வ வாளும் பகவதியின் அருளும் நாகதேவதையின் கடாட்சமும் என்னை என்றும் கவசங்களாக காப்பாற்றி வெற்றி தேடித்தரும் என்றான்

எங்களுக்கு நாகதேவதை புத்திரபாக்கியத்தைக் கொடுக்கவில்லை எங்கள் குறையை நினைத்து நாங்கள் வருந்தினாலும் இவர்களை எனது மக்களாகவே பரிபாலித்தேன் ஆனால் நாகதேவதை ஏன் எனக்கு புத்திர பாக்கியத்தை தராது விட்டாள் என்ற உண்மை நேற்றே எனக்கு உணர்த்தப்பட்டு விட்டது என்று பரவசத்துடன் கூறிய நாகதேவன் கௌதமனை மார்புடன் தழுவிக் கொண்டான்

உன்னைப்போல் சர்வலட்சணங்களும் சர்வவல்லமையும் கொண்ட ஓர் அரச குமாரனை எம் இனத்தவர் பார்த்ததும் நாகதேவதைக்கு பலியிடவே விரும்புவார்கள் வீராதி வீரனான உன் தீரச்செயல்களை கண்முன்னே கண்டதும் ராட்சத விலங்கை நீ கொன்று எம் இனத்தை காப்பாற்றியதும், மகிழ்ச்சியை அளித்தபோதும் உன்னைரக் கிலி கொண்டோம் ஆனால் உயிராபத்திலிருந்த செங்கோடனை நீ காப்பாற்றியதும் உன்னை தேவ தூதனாகவே நம்பினேம் உன்னுடைய ஒவ்வொரு செயலும்எங்களை மெய்மறக்கச் செய்தன நாகதேவதையை நீவிரும்பி வழிபாடு செய்தமை என் மனதை உருக்கி உள்ளேயிருந்த ஓர் ஏக்கத்தை வெளிக்கொணர்ந்ததும் நீயே மகன் எங்கள் குலதெய்வம் தந்த தெய்வ மகன் என உணர்ந்தேன் என்னையறியாமலே மகனே என்று அழைத்தேன்

என்று அவனை இறுகதழுவினன். நாகர்கள் ஆரவாரம் செய்தனர் மகிழ்ச்சிக் கூத்தாடினர் ஊது கொம்புகள் தாரை தம்பட்டைகள் அடிக்கப்பட்டன நாகர்குல இளவரசனுக்குரிய சகல மரியாதைகளும்செய்யப்பட்டன

''தந்தையே! நண்பர்களே! நான் இங்கே வர முன்பு உங்களைச்சந்திக்க நேர்ந்தால் பயங்கர சந்திப்பாகவே இருக்கும் என்று நினைத்தேன். ராட்சதவிலங்கு நதியைக் கடந்ததும் என்மனதில் தோன்றியது முதல் உங்கள் நினைவுதான். உங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதும் பின் தொடர்ந்து இங்கே வந்தேன் கடவுளுக்கு மனிதர்களை பலி கொடுக்கும் தீய எண்ணங்களை விட்டுவிடுங்கள் குலவழக்கம் கூணக்கேடானதுஎன்ருல் அதை தவிர்த்து விடுங்கள் உங்கள் குலம் தழைத்தோங்க நாகதேவதை அருள்புரிவாள்'' என்ருன் அவன் கூறியதும் மேலே மரங்களிலிருந்து மலர்கள்

சொரிந்தன

பார்த்தீர்களா வனதேவதை வாழ்த்துகிருள் என்ருன் கௌதமன்

எல்லோரும் அவன் சொல்லுக்குட்பட்டு வணங்கி நின்றனர் அவன் மேலும் அவர்களுக்கு பல அறிவுரைகள் கூறி தன் பணி முடிந்து திரும்பி வந்து ஒரு மாத காலம் அவர்கள் விருந்தினனுகத் தங்கியிருந்து புறப்படு வதாகக் கூறியதும் எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

ஜனநாத மங்கலத்து புரவிகள் அணிவகுத்து நின்றன அவைக்குச் சமீபமாக அன்று விடுதலை செய்யப்பட்ட வீராகள் தமது புரவிகளை நாகர்களின் பிரயாணத்துக் காக தயார் செய்து வைத்திருந்தனர் எல்லோரிடமும் விடை பெற்றுப் புறப்பட்டான் கௌதமன்

விரைந்து சென்ற புரவிகள் மலை வயிற்றுள் கதிர வன் மடிந்து கொண்டிருக்கும் வேளையில் நீண்டதூரத் தைக் கடந்து விட்டகளைப்பில் ஒய்வுக்காக நின்ற போது அவர்களை எதிர்பார்த்து நின்றது போல ஓர் பயங்கர சம்பவம் நிகழ்ந்தது.

## 10

ஜனநாத மங்கலத்து அரண்மனையில் மந்திரி மாளவ ர்மர் மகிழ்ச்சியோடு அரசனை காண விரைந்தார். அவரு டைய மகிழ்ச்சிக்கு காரணம் கௌதமன்புருமூலம் அனுப் பிய செய்திகளை நாகர்கள் தன்னை தேவதூதனுக ஏற்றுக் கொண்ட விடயங்களை எல்லாம் அறிவித்திருந்தான்

கௌதமன் அவனுடைய வீரச் செய்திகள் ஜனநாக மங்கலம் எங்கும் விரைந்துபரவின அவனுடைய தாய்க்கு கௌதமபுரிக்குச் செய்தி அனுப்பினர் மாளவர்மர்.

விடிகாலையின் இதமான காற்றின் மென்மையில் துயில் நீங்கி எழுந்த கௌதமன் தனக்கு முன்னரே நாக இளைஞர்கள் பிரயாணத்துக்கான ஆயத்தநிலையிலிருப்பதை பார்த்து மகிழ்ச்சியடைந்தான்.

''செங்கோடா'' என்று அழைத்தான் கௌதமன்.

பிரபு'' என்று அவன் முன்னே மண்டியிட்டான் செங்கோடன் என்ற நாகவாலிபன். கௌதமனுல் காப்பாற்றப்பட்டவனுன அந்த வாலிபன் நன்றியுணர்வோடு அவன் முகத்தையே பார்த்தான்.

''இரவு நீ தூங்கவில்லையா?''

'தாங்கள் தூங்கும் போது காவல் காத்தேன்.

தூங்காவிட்டால் பிரயாணம் செய்வது கஷ்டமாக இருக்குமே செங்கோடா''

பிரபு எனக்கு மட்டுமல்ல என் இனத்தவர்களுக்கே இது சாதாரண விடயம் நாட்கணக்கில் தூக்கத்தை மறந்து திரிவோம் தாங்கள் விழிப்புடனிருந்தால் நாங்கள் பயமின்றி இருப்போம் தாங்கள் உறங்கியதும் அந்த வேளையிலாவது தங்களை காக்கும் பெரும் பாக்கியத்தை நாங்கள் பெற்றுக் கொள்ள விரும்புகின்றோம். என்றான்

அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு புன்னகை பூத்தான் கௌதமன் அவன் புன்னகையில் மெய்மறந்த நாக இளைஞன் செங்கோடன் பிரபு எனக்கு ஒரு சந்தேகம் என்றான் என்ன செங்கோடா என்று அவன் கேட்டதும் மற்ற இளைஞர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டனர்

நேற்று மாலையில் அந்த வேங்கை கூட தங்கள் கூற்றைக் கேட்டு பதுங்கி ஓடியதை நினைத்தால் பெரும் பிரமிப்பாக இருச்கின்றது காட்டுவாசிகளான நாங்களே கண்டு நடுங்கும் இராச வேங்கை அது பூனைபோல் பதுங்கியதை நினைத்தால் என் உடல் சிலிர்க்கின்றது எங்கள் மொழி அதற்கு புரியுமா பிரபு என்றான்

,,செங்கோடா! நாம் ஒருவர்க் கொருவர் பயந்து தான் முதலில் தாக்க முனைகின்றோம் மனித உருவில் பிறந்த நாங்களே ஒருவரை ஒருவர் தாக்கி கொலை செய்கின்றோம். அவை மிருகங்கள். தங்களை நாம் வேட்டையாட வருகின்றோம் என்பதால் எம்மை வேட்டையாட முனைகின்றன, அத்துடன் இந்த வாளின் சக்திதான் அந்த இராசவேங்கையைப் பணிய வைத்து மொழியால் புரிய முடியாத சில விடயங்கள் ஒலியால், ஒளியால் புரிய வைக்கமுடியும். இதோ பார்'' என்று தன் உறையிலிருந்த வாளை உருவி அவர்கள் எதிரே பிடித்தான். அந்த வாளின் பிடியிலிருந்த கற்களின் பல் வேறு ஒளி வடிவங்கள் அவர்கள் விழிகளில் பட்டதும் அவர்கள் மந்திரசக்திக்குட்பட்டவர்களாய் நின்றிருந் தனர். வாளை உறையில் வைத்துக் கொண்டே கௌதமன்

''செங்கோடா இந்த அபூர்வ ஒளி உங்களை கட்டுப் படுத்தும் அதேவேளையில் என் மொழி ஒலி வடிவில் உங்களுக்கு கட்டளைகளைப்பிறப்பிக்கின்றது. இதை தெய்வ சங்கற்பம் என்றும் கூறலாம்'' என்றான்.

''பிரபு! செங்கோடன் இராசவேங்கை எம் முன் பாய்ந்ததும் பயந்து விட்டான். எங்களை தாக்க வேண்டாம் என்று தாங்கள் கட்டளையிட்டதும், வாளை உருவியதும் எனக்கு பெரும் மகிழ்ச்சி அன்று அந்த ராட்சத விலங்

கோடு நீங்கள் புரிந்த வீர சாகசத்தை நேரில் பார்த்தவன் நான். செங்கோடன் அன்று மயங்கி கிடந்ததால் பார்கவில்லை. இன்றும் ஓர் வீர விளையாட்டைக் காணலாம் என்றிருந்தேன். தாங்கள் சாதாரணமாகவே அந்தப் பயங்கரத்தை ஊதித் தள்ளி விட்டீர்கள்'' என்றான் கார் கோடன் என்ற இன்னோர் நாக இளைஞன்.

''நண்பர்களே! உங்கள் தலைவர் நாகதேவன் தனக்கு மகப்பேறு கிடைக்கவில்லை என்று ஏங்குவதைப் பார்த்தீர்களா? நாகதேவதையின் அருள் பெற்ற அவருக்கு ஏன் ஓர் குழந்தை கிடைக்கவில்லை. அநீதியாக எதையும் தெய்வம் செய்வதில்லை. நாகதேவனுக்கு நீங்கள் மற்றவர்களை பலியிடும் வழக்கத்தை வெறுத்து ஒதுக்க வேண்டும். தேவதைகள் கருணையின். இருப்பிடம் மற்றும் உயிர்களிடம் கருணை காட்ட வேண்டும். அதற்காக துஷ்டர்களுககு கருணை காட்ட வேண்டுமென்பதில்லை நீதி விசாரணை செய்து தண்டிக்கலாம். எமது உயிருக்கு ஆபத்து வரும் போது நாம் அதற்கு கருணை காட்ட வேண்டியதில்லை. எம்மை பாதுகாக்க எம்மை கொல்ல வருபவர்களை கொல்லலாம்.இதோ பாருங்கள், என்று தன் கழுத்துப் பக்கம் கையை விட்டு தேள் வடிவிலான ஆயுதத்தை எடுத்துக் காண்பித்தான்.

நாக இளைஞர்கள் அதனை வியப்புடன் நோக்கினர் அந்த ஆயுதத்தினாலேயே ராட்சத விலங்கின் கண்களை தாக்கி அதன் கொட்டத்தை அடக்கி கொலை செய்த கௌதமனின் அற்புத சாகசத்தை செங்கோடனைத் தரவி மற்றவர்கள் நேரில் பார்த்தவர்களாகையால் அதனைப் பார்த்து மெய் சிலிர்த்தனர்.

''இந்த ஆயுதம் என் குருநாதர் தூமகேதுவால் எனக்கு வழங்கபட்டவை. என் உயிருக்கு ஆபத்து

நேரும் சமயங்களில் மட்டுமே பாவிக்க வேண்டும் என்பது அவர் கட்டளை, என்னை மட்டுமல்ல உங்கள் குலத்தைப் பாதுகாக்க, ஓர் தீமையை ஒழிக்கவே இதனைப் பயன் படுத்தினேன். இராசவேங்கையை ஒழிக்க இதில் ஒன்று போதும். அது எம்மை எதிர்க்கவில்லையே. தன்னைப் பாதுகாத்துக் கொண்டது,, என்று கூறிச் சிரித்தான்

''பிரபு நாங்கள் புறப்படலாம்?,, என்றான் செங் கோடன்.

''ஆமாம் நாம் புறப்படலாம்,, என்று கூறி விட்டு சில ஆயத்தங்களை செய்தான் கௌதமன்.

அன்று மதியப் பொழுதில் மகேந்திர பர்வதத்தின் மலை முகட்டுக்கு சமீபமாக வந்து விட்டார்கள். வசதி யான ஓர் இடத்தில் புரவிகளை நிறுத்தி விட்டு இளைப் பாறினார்கள். மீண்டும் பிரயாணத்தை தொடர்ந்த போது ஏதோ ஓர் இரைச்சல் கேட்டது.

செங்கோடா அது என்ன ஓசை?'' என்று கேட் டான் கௌதமண்.

நன்றாக உற்றுக் கேட்ட செங்கோடன் ''பிரபு இந்த ஒலி சமீபமாக ஏதோ ஓர் நீர் வீழ்ச்சியிருப்பதனை ஊர் ஜிதம் செய்கின்றது என்றான்.''

நீர் வீழ்ச்சியா?''

ஆமாம் பிரபு இன்னும் சிறிது தூரம் போனால் நன்கு தெரிந்து கொள்ளலாம்'' என்றான் செங்கோடன்.

சில நாழிகைப் பொழுது பிரயாணத்தில் அவர்கள் அந்த அதிசய நீர் வீழ்ச்சியை கண்டனர். வானத்தில்

இருந்து வெள்ளி உருகி வந்து கொண்டிருப்பது போன்று பெருகிக் கொண்டிருந்தது நீர். கௌதமனுடைய முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் படர்ந்தன. அவன் உள்ளம் உவகையால் நிரம்பியிருந்தது.

எமது பிரயாணம் இன்று இத்துடன் போதும் நாளை நாம் அநேகமாக எமது இலக்கை அடைந்து விடலாம். இரவு தங்குவதற்கு ஏற்ற வசதிகளை செய்யுங்கள்'' என்று உத்தரவு பிரப்பித்துவிட்டு அந்த இயற்கை எழிலைப்பருகினான் கௌதமன்.

மாலைச் சூரியனின் கிரணங்கள் நீர் வீழ்ச்சியின் பிரவாகத்தில் பட்டு வான வில்லாக விளங்கும் அற்புதமான காட்சியை மெய்மறந்து பார்த்துக்கொண்டு நின்றுவிட்ட அவனை ''இளவரசே'' என்று வாமணன் அழைத்ததும் சுயவுணர்வடைந்தவனாய் திரும்பினான்.

தாங்கள் ஏதாவது உணவு உட்கொள்ளலாமே, என்றான்.

இந்த அழகைப் பார்த்தாயா வாமனா'' என்றான் சிறுபிள்ளைபோல

இதற்கு பின்னே மனிதன் எத்தனை பேராபத்துக்களைப் பதுக்கி வைத்திருக்கின்றானோ?'' என்று கூறிச் சிரித்தான் வாமனன்.

உண்மைதான் வாமனா அழகை மட்டும் ரசித்தோமானால் ஆபத்துக்களுக்கு நாம் இரையாகி விடுவோம் ''என்று கூறியவாறு நாக இளைஞர்களிடம் சென்றான்.

நாங்கள் இந்தப் பகுதியால் மலையிலிருந்து நீர் விழும் இடத்துக்கு கீழே போவதற்கு சிறு பாதைகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். புரவிகளையும் வாமனனையும் இங்கே விட்டு நாம் சென்று வரலாம் என்றான் கௌதமன்.

பிரபு இந்த விடயத்தை எங்களிடம் விட்டு விடுங்கள். நீங்கள் ஓய்வெடுங்கள். நாங்கள் ஐவர் இந்தப்பணியில் தேர்ச்சி பெற்றவர்கள். நாங்கள் சென்று திரும்புகின்றோம் என்றான் கார்கோடன்.

கார்கோடா ஏதும் அபாயங்களை சந்திக்க நேர்ந்தால் பேசாமல் திரும்பி விடுங்கள். எதையும் நாங்கள் சேர்ந்தே அனுபவிக்க வேண்டும் உங்களை நாகதேவனிடம் ஒப்படைக்கும் வரையில் உங்கள் உயிர், உடல் யாவும் என்னுடையவை. அது ஞாபகம் இருக்கட்டும்'' என்றான் கௌதமன்.

பிரபு! எங்கள் இனத்தவரை தவிர மற்றும் உயிர்களிடத்தில் கருணையே காட்டாத எங்கள் இதயங்களை சில கணப்பொழுதிலேயே மாற்றிவிட்டீர்கள். பயங்கர மிருகங்களிடமே கருணை காட்டும் தங்களுக்காக நாங்கள் இந்த உயிரையும் உடலையும் உங்கள் வெற்றிக்கு அர்ப்பணித்தாலும் எங்கள் தலைவர் மகிழ்ச்சியடைவாரேயன்றி துன்பப்பட மாட்டார். என்று கூறிச் சிரித்தான் கார்கோடன்.

ஓர் உயிரை அழிக்கத்தான் எம்மால் முடியுமே தவிர மீளப் பெறமுடியுமா கார்கோடா''

ஏன் முடியாது? செங்கோடன் உயிரை மீட்டுத்தந்தீர்களே என்றான்.

அவனுடைய உயிரை நான் மீட்டேனு? காயத்தைத் தான் குணப்படுத்தினேன். கடவுள் அவனைத் தப்ப வைத்தார் ,என்று அவன் கூறும் போது

பிரபு அங்கே பாருங்கள் என்று ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினுன் செங்கோடன்

## 11

துள்ளியோடும் மான் கூட்டமொன்றைச் சுட்டிக் காட்டிய செங்கோடன் எழுந்து சென்று அவை போகும் திசையை சிறிது நேரம் பார்த்துவிட்டு கார்கோடா இந்த மான் கூட்டத்தைப் பின் தொடர்ந்தீர்களானுல் பாதையை அறிவது சுலபம் என்ருன். உடனே கார் கோடனும் அவன் நண்பர்களும் விடை பெற்றுப்புறப் பட்டனர்.

நன்கு இருட்டிய பின்னர் கார்கோடனும் அவன் நண்பர்களும் வந்து சோந்தனர். வரும் பொழுது விதம் விதமான மலைப்பழங்களைப் பறித்து வந்தனர் அத்துடன் கௌதமன் எதிர்பார்த்த பதிலோடு வந்து சேர்ந்தனர்

மறுநாள் விடிந்ததும் புரவிகளை அங்கேயே விட்டு விட்டு கால்நடையாகவே புறப்பட்டுச் சென்றனர். அவர் கள் ஏற்கனவே திட்டமிட்ட பாதையின் வழியே சீக்கிர மே அருவிக்கு சமீபித்து விட்டனர்.

அதோ பார்த்தீர்களா என்ருன் கார்கோடன்.

மலைப்பாதைக்கும் நீருக்குமிடையே உள்ள இடை வெளியில் குகை வாசல் இருக்க வேண்டும் வெளியே எங்கு நின்று பார்த்தாலும் இதன் அமைப்பையோ இங்கு நடப்பவற்றையோ யாரும் பார்க்க முடியாது எதற்கும் மனக்கோட்டை கட்டுமுன்னர் கிட்டத்தில் போய்பார்த்து விடுவோம் என்றான் கௌதமன்.

முதனில் செங்கோடனும் அவனைத் தொடர்ந்து கௌதமனும் வாமனும் ஒருவர் பின் ஒருவராக அவ்விடத்தைச் சென்றடைந்தனர். நீர்வீழ்ச்சியின் பின்புறம் மலைப் பாதையில் இன்னோர் பெரும் பாறையை சதுரமாக வெட்டி இறுக்கி விட்டது போன்று இன்னோர் பாறை மூடப்பட்டிருந்தது. அதன் மேல் பகுதியில் பெரும் பூதத்தின் தலை செதுக்கப்பட்டிருந்தது யாராவது திடீரென அதைப் பார்க்க நேர்ந்தால் நீர் வீழ்ச்சியின் பின்னே ஒரு கரும் பூதம் ஒழிந்து கொண்டிருப்பதாக நினைத்து ஏக்கத்தால் உயிர் விடநேரிடும் அப்படி அமைந்தது அந்த பயங்கரத் தோற்றம்.

''நண்பர்களே! இங்கே நாம் பல திடுக்கிடும் நிகழ்ச்சிகளை, பயங்கர சம்பவங்களைப் பார்க்க நேரிடலாம் எதற்கும் பயப்படக் கூடாது பயம் தான் எமது முதல் எதிரி எம் கூட இருந்தே எம்மை கோழையாக்கி விடும் முதல் எதிரி பயம்தான். ஆகவே நான் சொல்வதைச் செய்வதைத் தவிர நீங்கள் எதையும் செய்யக் கூடாது ஏன் என்று கேட்கவும் கூடாது'' என்று கூறியவனின் அடுத்த உத்தரவை கேட்டு வாமனன் திடுக்கிட்டு நின்றான்

''இளவரசே! என் கரத்தைக் கீறுகின்றேன் தங்கள் கரத்தை நான் கீற முடியாது.,' என்றான்

''வாமனா! முட்டாள்தனமாக உளருதே. நான் சொல்வதைச் செய் என்னைக் கேள்வி கேட்காதே என்று

இளரந்தான் அடுத்த விநாடி வேண்டா வெறுப்பாக கௌதமனின் கரத்தில் சிறு கத்துவாளால் கீறி விட்டான் குருதி கொட்டியது தொங்கிக் கொண்டிருந்த பூதத்தின் நீண்ட நாக்கில் இரத்தத் துளிகளை விட்டான் அடுத்த விநாடி மலையே இடிந்து பெயர்ந்தது போன்ற ஓசையுடன் கற்பாறை விலக்கி கொண்டது அதைத் தொடர்ந்து

''ஹ ஹ ஹ'' என்ற பேய்ச் சிரிப்பு அவர்களை அதிரவைத்தது.

''பூததேவா இப்படிச் சிரித்தால் நாங்கள் பயந்து ஓடிவிடுவோம் என்று நினைத்தாயோ? நாங்கள் யாருக்கும் அஞ்சாத சிங்கங்கள், துணிவிருந்தால் முன்னே வா என்று கர்ஜித்தான் கௌதமன்

இளங்கன்றுகள் பயமறியாதவை தான் உயிர்மேல் ஆசையிருந்தால் ஓடிவிடுங்கள் பூதத்தின் குரல்

''ஹ ஹ ஹ'' எனப் பலமாகச் சிரித்த கௌதமன்

பூததேவாமாய சக்திக்குகட்டுப்பட்டு இக்கோட்டையில் முடங்கியிருக்கும் உன்னை விடுதலை செய்து விடுவிக்கிறேன் நான் சத்தியம் தவறாதவன். என்முன்னே வா என்றான் கௌதமன்.

பொடிப்பயல்களா! கரத்திலே பெருகும் உதிரத்தை நிறுத்தினால் நான் வருவேன் அந்தக் காயத்தை உடனே உன்னால் இல்லாமல் செய்ய முடியுமானால் நான் உன் முன் வருவேன் ஆனால் இரண்டும நடக்க முடியாத விடயங்கள் இவ்விடத்தை விட்டு ஓடி விடுங்கள்'' பூதத்தின் குரலில் கேலி தொனித்தது

அடுத்த விநாடி கச்சையிலிருந்த சுவர்ணகாந்தி இலையை எடுத்து காயத்தின் மேல் வைத்து தடவினுன் கௌதமன் கணப்பொழுதில் காயம் மறைந்தது பலம் கொண்ட மட்டும் சிரித்தான் கௌதமன் அவனுடை சிரிப்பைக் கேட்டு நாக இளைஞர்களே உள்ளூர நடுங் கினர்

பூதகதேவா! சத்தியத்துக்கு கட்டுப்பட்டு நடப்பவர் கள் நாங்கள் உடனே என் முன் தோன்ற வேண்டும் இல்லையேல் வரவழைக்கும் வழி எனக்குத் தெரியும், என்று முழங்கினுன்.

அடுத்த விநாடி அவர்களுக்கு சமீபமாக புகை கிளம் பியது புகை மறைந்ததும் பூதத்தை எல்லோரும் பார்த்தனர் தலையில் இரு சிறு கொம்புகள் பெரிய விழிகள் பெரிய மூக்கும் கொண்ட அந்த உருவத்தைப் பார்த்த நாக இளைஞர்கள் பயந்தாலும் கௌதமனிருப் பதால் பயமின்றிப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

மகா பிரபோ தாங்கள் யார்?'' என்றது பூதம்

''கௌதம நாட்டின் இளவரசன் என் பெயர் கௌதமன் இவன் என் தோழன் வாமனன் இவர்கள் என் நாக நண்பர்கள்.

நான் இக் கோட்டையின் சிற்பி நான் மகாதத்தனின் அடிமை'' என்றது பூதம்.

பூததேவா மகாதத்தன் இறந்துவிட்டான் அவன் சக்தியும் போய்விட்டது மகாதத்தனை விட நான் சர்வ வல்லமையுடையவன் நீ இனி யாருக்கும் அடிமையில்லை என்ருன் கௌதமன்.

மகாதத்தன் இறந்தாலும் ஆவியாக வந்து இச் கோட்டையில் ஆட்சி செலுத்துகின்றார்.

எங்கே அந்த மாயாவி? அழைத்து செல் அவனிடம், என்றான் கெளதமன்,

அடுத்த விநாடி அந்தக் கோட்டையே அதிரும் வண்ணம் சிரிப்புச் சத்தம் எழுந்தது அதைத் தொடர்ந்து ஓர் அதிசய ஒளி தென்பட்டது பத்துத் தலையும் இருபது கரங்களும் கொண்ட இராவணன் உயிர்பெற்று வந்தது போன்ற தோற்றம் ஒன்று தெரிந்தது

பூதகேவா! இராவணன் கோட்டை இதுதான் என்பது ஊர்ஜிதமாகிவிட்டது இது எல்லாம் உன்னுடைய மாய விநோதங்களா? உள்ளே சென்று கதவை திறந்து விடு என்றான்

கதவை திறப்பதுதான் என்வேலை மேலே நடப்ப வற்றை நீங்கள் வெற்றி கொண்டே உட்செல்ல முடி யும் என்றது பூதம்

இராவணனுடைய உருவத்தின் கீழே ஓர் சிறிய கதவு திறந்தது கொண்டது கதவின் இடையில் ஐந்து தலை களுடைய நாகம் ஒன்று கனல் கக்கும் விழிகளோடு சிறிக் கொண்டிருந்தது.

கெளதமன் புன்முறுவல் பூத்தவனாய் நாகதேவா இதனை முன்கூட்டியே உணர்ந்தோ என்னவோ என் கை யில் இந்த தாயத்தை அணிவித்தாய் என்று மனத்தில் நினைத்தவாறே தாயத்து கையை நீட்டியவாறு முன் னேறிச் சென்றான் ஐந்து தலை நாகம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது உள்ளே சென்றதும் கதவை அடைத்தும் பூட்டினான் கெளதமன்.

அந்தக் கோட்டையின் அழகிய அமைப்பில் எங்கே திரும்பினலும் பயங்கர தோற்றமே தெரிந்தது அவர்களுக்கு நேர் எதிரே இரத்தின சிம்மாசனம். எங்கேயும் வைரங்களாகவும், வைடூரியங்களாகவும் ஒளிவிட்டுப் பிரகாசித்தன யாவையும் நோட்டம் விட்ட கௌதமன் "மகாதத்தன் என்னும் மாயப் பிசாசே எங்கேயிருக்கின்ருய்? ஏன் மௌனம்? என்று இடிபோல் கர்ஜித்தான்

கௌதமா! நீ ஏன் இங்கு வந்தாய்? என்று மகாத்தனின் ஆவியின் குரல் கேட்டது

உன் கபட நாடகத்துக்கு முடிவுகட்டவே நான் வந்தேன்.

கௌதமா! நீ வீரன் அறிவாளி அதிவிவேகி கருணை மறவன் உன்னை எதிர்ப்பவர்களையே எதிர்ப்பவன் நான் உன்னை எதிர்க்கவில்லை எங்கேயோ காட்டு மத்தியில் மலை முடுக்கில் கோட்டை கட்டி அமைதியுடன் வாழ நினைத்தேன். நாகர்கள் சூழ்ச்சியால் என்னை கொன்று விட்டார்கள் ஆவியாய் அலையாமல் இந்தக் கோட்டையில் வாழ்கிறேன் நீ ஏன் என்னை எதிர்த்து வந்தாய்?"

அப்படி கேள் மகாதத்தரே! மாளவநாட்டின் ராஜகுரு நீர் தர்மோபதேசம் செய்பவர் அவற்றை மறந்துமன்னனை கொன்ருய் அங்கே உள்ள தெய்வத்தைக் கொள்ளையடித்தாய் பகவதிதேவியின் அபூர்வ வாளைத் திருடி உன் அயோக்கியதனத்திற்கு கவசமாக்கினுய் இவை போதாதா நான் உன்னை எதிர்ப்பதற்கு" என்ருன்.

நான் செய்தவற்ருல் கௌதமபுரியோடு மாளவம் இணைந்தது உங்களுக்கு நான் நல்லதையே செய்தேன்"

நல்லதையே செய்தாய் வஞ்சகமாய் என் தந்தை யைக் கொன்று எமது நாட்டிலும் கலசத்துக்கு வித்திட்டவன் நீயல்லவா? உன்னைப் பழிவாங்கவே நான் விரும்பினேன் அதற்கு இடம் வைக்காமல் நாகர்கள் செய்து விட்டார்கள்

நாகர்கள் துரோகிகள் அவர்களை ஒழித்துக்கட்ட முயன்ற என்னை நீ கெடுத்து விட்டாய் என்று கோபாவேசமாக சீறியது அவன் ஆவி.

## 12

நாகர்களை கொலை செய்வதற்காக ராட்சத விலங்கினுள் தானே புகுந்து வந்ததாகவும், தன் முயற்சியை கௌதமன் கெடுத்துவிட்டதாகவும் மகாதத்தனின் ஆவி கூறிய கதையைக் கேட்டதும் ஒரு கணம் திகிலடைந்தான் கௌதமன். அந்த அபூர்வ வாளை அபகரிக்க எண்ணியே அவன் அப்படிச் செய்தான் என்பதை உணர்ந்து கொண்டான் கௌதமன் நாகர்களின் மொழியிலே அவர்கள் உரையாடல் இடம் பெற்றதால் நாக இளைஞர்கள் கிலிபிடித்து நின்றனராயினும் அவர்களுக்கு கௌதமனிடம் மேன் மேலும் பக்தி உண்டாகியது அவனின்றேல் தங்கள் குலம் அழிந்திருக்கும் என எண்ணிய போது கௌதமனுக்காக தாங்கள் அழிந்தாலும் பரவாயில்லை என்ற நிலைக்கு வந்து விட்டனர்.

,,மகாதத்தா! நீ செய்த முட்டாள்தனம் எங்கள் நாட்டோடு போகவில்லை. ஜனநாதமங்கலத்து பிககு மூலிகை தேடியலைவதைக் கண்டு உன் வஞ்சக வலையை விரித்தாய். பழைய பெட்டியில் ஏட்டுச் சுவடியை வைத்து இராவணன் கோட்டையை பற்றி தவறான

தகவல்களை கொடுத்திருந்தாய் நீ நினைத்தது போலவே பிக்கு அரசனிடம் சுவடியைக் கொடுத்தார். இராவணன் கோட்டையை தேடி வருபவர்களை எதிர்பார்த்தாய். ஆனால் அங்கேயுள்ளவர்களுக்கு அத்தகைய துணிவு ஏற்படவில்லை. ஆனால் அங்கே அரசியல் குழப்பம் ஆரம்பித்தது. இந்த நிலையில் தான் நான் முயற்சித்தேன். ஓரளவுக்கு அடிமுடி தெரியாது தவித்த எனக்கு சுவடிகள் வழிகாட்டிக் கொடுத்தன உன் துரோகத்துக்கு நாகர்கள் நல்ல பாடமே கற்பித்தார்கள். பகவதியின் வாளும் காப்பாற்றப்பட்டது,, என்றான்.

''அப்படியானால் அந்த வாள் எங்கே?,, ஆவி பரிதாபமாகக் கேட்டது.

''அந்தவாள் இப்போது உரியவர்களிடம் சேர்ந்து விட்டது இனி உன் மந்திர தந்திரம் பலிக்காது. என்றான் கௌதமன்.

''என்னுடலைத்தான் நாகர்களால் அழிக்க முடிந்தது என்னை அழிக்க எவராலும் முடியாது கௌதமா உனக்கு இங்கே உள்ள செல்வங்கள் தானே தேவை. எடுத்துச் செல் என் வழியில் குறுக்கிடாதே,, என்று கூறியது மகாத்தனின் ஆவி.

''நீ நினைப்பது போலில்லை மகாதத்தா இதோ பார் என்று அதுவரை அங்கியினுள் மறைத்து வைத்திருந்த வாளை வெளியே உருவி எடுத்தான் கௌதமன்

,,கௌதமா கௌதமா உன்னை மன்றாடிக் கேட்கின்றேன். அந்த வாளை மறைத்து வை,, என்று மன்றாடியது மகாதத்தனின் ஆவி

,,இப்போது புரிகின்றதா? உன் அதிகாரம் பறிக்கப்பட்டு விட்டது இந்தக் கோட்டையில் உன் அத்தியாயம் முடிந்துவிட்டது. நான் தான் இங்கே ஆளும் வலுவுடையவன். பூததேவா இங்கே வா'' என்று கட்டளையிட்டான்.

பூதம் அங்கே வந்து நின்றது தலை குனிந்து நின்ற பூதத்தை புன்முறுவலுடன் நோக்கினான் கௌதமன்

மகா பிரபு! நீங்கள் என் கௌதமன் என்று உணர்ந்துவிட்டேன். உத்தரவிடுங்கள் பிரபு,, என்றது

''இங்கேயிருக்கும் அனைத்துச் செல்வமும் அநியாயமாக அபகரிக்கப்பட்டவை அத்தனையும் மூட்டை கட்டி இங்கே வை,,

''ஆகட்டும் பிரபு,, என்று கூறியதுதான் தாமதம் எல்லாம் காற்றில் மிதப்பதுபோன்று அவன் முன் வந்து குவிந்தன.

,,அந்த இரத்தின சிம்மாசனத்தில் தான் மகாதத்தர் வீற்றிருக்கின்றாரா?

''ஆம் மகாபிரபு''என்றது பூதம்.

'மகாதத்தா நீ ஏன் மௌனம் சாதிக்கின்றாய் என்று கூறி கழுத்தின் பின்புறத்திலிருந்து தேள் வடிவான ஆயுதத்தை எடுத்தான் அவன் அதனை வெளியே எடுத்தது தான் தெரியும்

''கௌதமா என்னை அழித்துவிடாதே,, என்று அலறியது மகாதத்தன் ஆவி

உம் உருவம் தான் எனக்கு தெரியவில்லை எப்படி எப்படி என்ருல் உம்மை அழிக்க முடியும், என்று கேலியாகச் சிரித்தான் கௌதமன்.

''எல்லாம் அறிந்த நீயா இப்படிக் கேட்கிருய் இதுதூமகேதுவின் விசேட தயாரிப்பு தெய்வீக சக்தி நிறைந்த ஆயுதம் இதனை எல்லோரும் பிரயோகிக்க முடியாது நீ சர்வ கலாவல்லவன். தூமகேதுவின் சீடன் என்னை அழித்துவிடாதே கௌதமா இந்தக் கோட்டையில் யாருக்கும் தீங்கில்லாமல் அமைதியாக வாழ என்னை அனுமதிக்க வேண்டுகின்றேன்'' என்று மன்ருடினன்

''மகாதத்தா! உன்னை மன்னிப்பது சுலபம். நீ மற்ற வர்களுக்கு தீங்கிழைக்க மாட்டாய் என்பது நம்பக்கூடிய தாயில்லை'' என்ருன்.

''நான் மனிதன் இல்லை ஆவி சத்தியம் தவற மாட்டேன் நீ வைத்திருக்கும் பகவதி தேவியின் அபூர்வ சக்திபடைத்த வாளின் மீது ஆணை, நான் உனக்களித்த வாக்கை மீற மாட்டேன்,, என்ருன் மகாதத்தன்.

''நீ ஆசைப்படுவதை எடுத்துக் கொள் மகாதத்தா என்ருன் கௌதமன்

''எனக்கு இந்த சிம்மாசனம் மட்டும் போதும் கௌதமா. உனக்கு சர்வ வல்லமையும் உண்டாகட்டும்'' என்று ஆசி கூறியது ஆவி.

''நன்றி மகாதத்தா பூதவேதா இவை யாவையும் எடுத்துக் கொண்டு இவர்கள் பின்னே செல் அதற்கு முன்பு எனக்கு உன் உதவி தேவை''

''உத்தரவிடுங்கள் மகா பிரபு,,

''சுவர்ண காந்தி மூலிகை செடி தேவை''

''இதோ என்று சில கணப்பொழுதில் ஒரு கட்டுச் செடிகளைக் கொண்டு வந்து கொடுத்தது.

''நன்றி பூததேவா. இன்று முதல் உனக்கு விடுதலை மகாதத்தா, என் பிரயாணம் இப்படி சுலபமாக முடியும் என்று நான் நினைக்கவில்லை நன்றி விடைபெறுகின்றேன் என்று கூறினான் கௌதமன்.

''தன்வினை தன்னை சுடும்,, என்று மகாதத்தனின் ஆவி கூறிவிட்டு தேம்பி அழும் ஓசை கேட்டது.

வெற்றியோடு திரும்பிய கௌதமனை நாகத் தலைவன் பெரும் வரவேற்புச் செய்து மகிழ்வித்தான். செங் கோடனும், கார்கோடனும் கௌதமனுடைய சாகசங் கள் பற்றி தமது இனத்தவர்களுக்கு கதை:கதையாகக் கூறிப் பெருமைப்பட்டனர் மாளவர்மனின் செய்தியோடு வந்த புறு கௌதமனுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தது

ஜனநாதமங்கலம் கௌதமபுரி மாளவம் முதலிய நாடுகளின் தளபதிகளும் மந்திரி மாளவர்மன் தலைமை யில் வந்து மந்தாகினி கரையில் முகாமிட்டடிருந்னர் அவர்களோடு கௌதமபுரி அரசியார் கௌதமனின் அன்னையும் வந்திருந்தார்

ஒரு மாதகாலம் நாகர்களின் விருந்திலும் அன்பிலும் மூழ்கித் திளைத்த கௌதமன் இராவணன் கோட்டை யிலிருந்து கொண்டு வந்த பெறுமதி வாய்ந்த வைரங் களை நாகர்களுக்கு கொடுத்த போது அவற்றிற்கு நாக

தலைவன் அளித்த விளக்கம் அவனை மெய் சிலிர்க்க வைத்தது

மகனே! நீ அன்புடன் அளித்த பெறுமதிகளை நான் ஏற்க மறுப்பதற்கு நீ கோபம் கொள்ள கூடாது. பிறர் பொருளில் எமக்கு ஆசை இல்லை. அது மட்டுமல்ல இவை இங்கிருந்தால் நாகரீக மனிதர்களை பிடித்தாட்டும் பேராசை ஓர் குடும்பமாக ஒற்றுமையாக வாழும் நாகர்களை பிரித்து வைக்கும் விஷமாகி விடும் உன்னுடைய தியாக மனமும், கருணை நிறைந்த உன் அன்பும் எங்கள் மனதில் நீங்காத மாணிக்கமாக பதிந்துவிட்டன இந்த அன்புச் சுமையே நாகர்குலத்திற்கு நீ அளித்த வெகுமதியாயிருக்கட்டும் என்று அவனை அணைத்து உச்சி மோர்ந்தான்.

அவனுடன் கூடவே நாகர்கள் மந்தாகினியின் மறு கரை வரை வந்து கௌதமனின் அன்னையைத் தரிசித்தனர் கௌதமனை பிரிய மனமின்றி நாக இளைஞர்கள் கண்ணீர் சிந்தியதையும், நாக தலைவன் மனம் கலங்கி விடையளித்ததையும் பார்த்து படைத் தலைவர்கள் மாளவர்மர் கூட வியப்படைந்தார்

இளவரசே! அறியாமல் நான் தவறு செய்திருந்தால் என்னை மன்னிக்க வேண்டும் ஜனநாதசங்கலத்துக்கு தங்களால் கிடைத்த மதிப்பை விட தங்களின் கீழ் நான் படைத்தலைவனாய் இருப்பதிலும் பெருமையடைகின்றேன் என்று சேனாதிரன் அவனை கட்டித் தழுவினான்

கைதியாயிருந்த உதயவர்மன் சேனாதிரனிடம் ஒப்படைக்கப்பட்டான் அவனை எரித்து விடுவது போல் பார்த்த சேனாதிரன்'' உதயவர்மா உறவாடிக் கெடுக்கும் கலையை எனக்கே நீ படிப்பித்துவிட்டாய் உனக்கு

மன்னிப்பே இடையாது,, என்றான்

தளபதியாரே! இத்தனைக்கும் காரணமான மகாதத்தனையே நான் நான் மன்னித்து விட்டேன் இவன் சாதாரணமானவன் அவனை மன்னித்து விடுதலை செய்து, விடுங்கள் என்றான் கௌதமன்

இளவரசே தங்கள் கருணை எதிரியை வீழ்த்தும் போன்றிருக்கின்றது இந்த நாகர்கள் தங்களை விடமாட்டார்கள் போலிருக்கே என்றார் தளபதி

காட்டுவாசிகளானாலும் சூதுவாது இல்லாதவர்கள் கோட்டையிலிருந்து கொண்டுவர்ப்பட்ட வைரங்களில் சில வற்றைக் கொடுத்தேன் அவர்கள் ஏற்க மறுத்தனர் தங்கள் ஒற்றுமையை குலைக்கும் விஷம் அவைகள் என்று கூறினான் நாக தலைவன் அறியாமையிலும் ஓர் அறிவொளி வீசும் தன்மை அவர்களிடம் இருக்கிறது என்று கூறும் போது'' பிரபு'' என்று ஓடி வந்தான் செங்கோடன்,

என்ன செங்கோடா? என்றான்

இதோ'' என்று சுவர்ண காந்திச் செடிகளை அவ்விடம் நீட்டினான்.

உங்களுக்கு,,

கொஞ்சம் எடுத்துக் கொண்டோம் பிரபு'' என்றான் அத்துடன் குனிந்து அவன் பாதங்களைப் பற்றி முத்தமிட்டான் செங்கோடன்

தன்பனே! நீ என்னோடு வருகின்றாயா? என்று கேட்டான் கௌதமன்.

பிரபு! தாங்கள் என் இதயத்தில் இருக்கின்றீர்கள் எங்கள் குல வழக்கத்துக்கு மாறுக நாம் நகருக்கு வர மாட்டோம் உங்களுடன் நாகர் குலமே பின் தொடரக் காத்திருக்கின்றது ஆனல் நாங்கள் ---- அவன் அழுது விட்டான்

அவன் கூறிய விடயங்களை கௌதமன் மற்றவர்களுக்கு கூறிய போது எல்லோரும் கண் கலங்கி நின்றனர் செங்கோடன் விடை பெற்றுப் புறப்பட்டான்

செங்கோடா! இங்கே வா இது என்னை விட்டுக் பிரியாத புரவி என்னை சந்திக்க வேண்டும் என்று விரும்பினல் இதனிடம் கூறினல் உன்னை ஏற்றிக் கொண்டு என்னிடம் அழைத்து வரும்' இது நாகர்களுக்கு என அன்புக் காணிக்கை என்று நாகதேவனிடம் கூறு என்று அந்த அசுவத்தின் காதில் ஏதோ கூறினன் அது கனைத்துக் கொண்டு செங்கோடனுடன் சென்றது அவர்களும் நாடு நோக்கி திரும்பினர்.

நாடு திரும்பிய கௌதமனுக்கு ஜனநாதமங்கல மன்னன் தன் மகள் ஜனனியை திருமணம் செய்து வைத்தான் மாளவம் ஜனநாதமங்களம் கௌதமபுரி ஆகிய மூன்று தேசங்களுக்கும் ஏக சக்கரவர்த்தியாக முடி சூட்டிக்கொண்ட கௌதமன் சிறப்புற ஆட்சி நடத்தி வந்தான்.

(நிறைவு)

இலங்கை, இந்திய நூல்கள், மற்றும் இந்திய
எழுத்தாளர்களின் கட்டுரை. கதைப்
புத்தகங்கள், ஜோதிட புத்தகங்கள்
சிறுவர் புத்தகங்கள் முதலியவற்றிற்கு

# ஸ்ரீகாந் புத்தகசாலை

NO 165. மின்சார நிலைய வீதி,
பஸ் நிலைய முன்புறம். யாழ்ப்பாணம்.

மற்றும் எம்மிடம்

அச்சகக் காகிதாதிகள் அச்சடிக்கும் காட்கள்
பாடசாலை உபகரணங்கள், ஸ்ரேசனறிச்
சாமான்கள் மாதவார சஞ்சிகைகள்
புதினப் பத்திரிகை, சகல வாழ்த்து,
மடல்கள், கலண்டர் டயறிகள், எழுது
கருவிகள், காகிதாதிகள், போட்டோஸ்ரற்
பிரதிகள் என்பன மொத்தமாகவும்.
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

அங்கீகாரம் பெற்ற (மக்மிலன்)
தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன முகவர்

அட்டைப் பதிப்பு: கே. ரி. அச்சகம், யாழ்ப்பாணம்